வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 06.01.2025 திங்கட்கிழமை இதழ் : 06 பக்கங்கள் : 12

# மாகாணத் தேர்தலை விரைவாக நடத்தி அதிகார பரவலாக்கத்தை உறுதி செய்க!

## இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

சென்னை, ஜனவரி 06

**இலங்கையில் நீண்ட காலமாக நடத்தப்படாமல் இருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை மிக விரைவாக நடத்தி தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநிலப் பிரிவு இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்திக் கேட்டிருக்கிறது.**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில மகாநாட்டில் இது தொடர்பில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டி ருக்கிறது.

அந்த மகாநாடு ஜனவரி 3ஆம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை விழுப்புரத்தில் கட்சியின் தேசிய மத்திய குழு உறுப்பினர் பெ. சண்முகம் தலைமையில் நடைபெற்றது.

மகாநாட்டில் கட்சியின் அரசியல் தலைமைக் குழு ஒருங்கிணைப்பாளர் பிரகாஷ் காரத், பிருந்தா காரத், எம்.ஏ. பேபி, ஜி. இராமகிருஷ்ணன், மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன் உட்பட மத்திய குழு, மாநிலச் செயற்குழு, மாநிலக்குழு ஆகியவற்றின் உறுப்பினர்களும் தமிழகம் முழுவதிலும் இருந்து

11

## முக்கியத்துவம் பெறும் அநுரவின் சீன விஜயம்

கொழும்பு, ஜன. 06

எதிர்வரும் 12ஆம் திகதி சீன ஜனாதிபதி சி ஜின் பிங்கின் அழைப்பின் பேரில் இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீனாவிற்கு அதிகாரபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயம் இராஜதந்திர நடவடிக்கைக்கு அப்பாற்பட்டது என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்தியாவை விஞ்சும் முயற்சியாக சீனா இலங்கைக்கு மேலும் கடன் நிவாரணம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை வழங்கக்கூடும் என்று இராஜதந்திர வட்டாரங்கள் ஊகிக்கின்றன.

சீனா பல ஆண்டுகளாக இலங்கையின் மிகப் பெரிய முதலீட்டாளராக இருந்து வருகிறது, அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு துறைமுக நகரம் மற்றும் பல்வேறு உள்கட்டமைப்பு முயற்சிகள் போன்ற திட்டங்களுக்கு

11

## சிறைகளில் நிரம்பி வழியும் கைதிகள்: கடும் இடநெருக்கடி

கொழும்பு, ஜன. 06

இலங்கையின் சிறைச்சாலைகளில் தற்போதைக்கு அதிகூடுதலான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதன் காரணமாக கடுமையான இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் பாரிய குற்றங்களில் ஈடுபட்டுள்ள குற்றவாளிகள் மட்டுமன்றி சிறு சிறு குற்றங்களில் ஈடுபட்ட கைதிகளும் உள்ளடங்கியுள்ளனர்.

சிறு சிறு குற்றங்களில் ஈடுபட்ட பல்லாயிரக் கணக்கானவர்கள், விதிக்கப்படும் அபராதத் தொகையை செலுத்த வழியின்றி சிறைச்சாலைகளில் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இவ்வாறான சிறு குற்றங்களில்

11

## இணைந்து செயல்பட முன்வரும் தரப்புடன் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட தயார்!

### ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கூறுகிறது

வவுனியா, ஜன. 06

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் இணைந்து செயற்பட முன்வரும் தரப்பினருடன் சேர்ந்து எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற உயர்மட்டக் குழுக்கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உயர்மட்டக்குழுக் கூட்டம் வவுனியா கோவில்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

பொதுத்

11

## தமிழினப்படுகொலைக் குற்றவாளிகள் பொறுப்புக்கூறலுக்கு உட்படவேண்டும்!

### நிலைப்பாட்டை தொடர்ந்து வலியுறுத்துவோம் என்கின்றார் கனேடிய கன்சர்வேட்டிவ் தலைவர்

ஒட்டாவா, ஜன. 06

கனடாவில் இம்மாதம் தமிழர் மரபுரிமை மாதமாகக் கொண்டாடப்படுகின்ற போதிலும், அதற்குரிய முழுமையான கௌரவம் இன்னமும் அடையப்படவில்லை. ஏனெனில் மிகமோசமான தமிழினப்படுகொலியினால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும் நீதிக்காகக் காத்திருக்கிறார்கள். எனவே அக்குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை நாம் தொடர்ந்து உறுதியாக வலியுறுத்துவோம் என கனேடிய கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர்

11

## காரின் கதவு திறக்கப்படாதமையால் வவுனியா இளைஞர் கனடாவில் சாவு!

ஒட்டாவா, ஜன. 06

கனடாவில் பணி புரியும் வவுனியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காரில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த சடலம் நேற்று முன்தினம் கனடா பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இளைஞர் பயணித்த காரின் கதவுகள் திறக்கப்படாததால் காருக்குள் சிக்கி உயிரிழந்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா, செட்டிகுளம்,

11

## ஜெனிவாவில் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க விசேட இராஜதந்திர குழு!

### வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஜன. 06

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக்கூறல் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில், விசேட இராஜதந்திக் குழு ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன், 58ஆவது அமர்வுக்கு முன்னர் சிறப்பறிக்கையை வெளியிடவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

இது குறித்து வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கையில்-

ஐக்கிய நாடுகள் மனித

11

## அரசாங்கத்தின் செயல்பாடுகளில் எந்தவித முன்னேற்றமும் இல்லை!

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 06

அரசாங்கத்தின் செயற்பாடுகளில் எந்தவித முன்னேற்றமும் கிடையாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

11

## 2024 ஆம் ஆண்டு நாட்டில் 100இற்கு மேற்பட்ட சூடுகள்!

### 61 பேர் உயிரிழப்பு, 47 பேர் படுகாயம்

கொழும்பு, ஜன. 06

கடந்த ஆண்டு 100 இற்கும் மேற்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 61 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 47 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டில் நடந்த பெரும்பாலான

11

## ரணில் - சஜித் சமரச முயற்சியில் இறங்கவுள்ளார் கரு ஜயசூரிய?

கொழும்பு, ஜன. 06

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அதன் தாய்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை மீள இணைக்கும் செயற்பாட்டுக்காக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவை இணைத்துக்கொள்ளவேண்டும் என யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் சில உறுப்பினர்களிடையே கொழும்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஐந்து வருடங்களில் மட்டும் வீதி விபத்துக்களில் 12,140 பேர் பலி

## 2024ஆம் ஆண்டில் 2,359 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 06

**கடந்த 5 வருடங்களில் வீதி விபத்துக்கள் காரணமாக நாட்டில் 12 ஆயிரத்து 140 மனித உயிர்கள் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

2020 முதல் 2024 வரையான ஆண்டுகளில் இடம்பெற்ற விபத்துக்கள் தொடர்பில் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புப் பணிப்பாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் எச்.ஏ.கே.ஏ.இந்திக ஹப்புகொடவின் மேற்பார்வையில் இடம்பெற்ற கணக்கெடுப்பில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, 2020 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 363 பேரும், 2021ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 557 பேரும், 2022ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 540 பேரும், 2023ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 321 பேரும், 2024ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 359 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இது தவிர, 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் நவம்பர் 30ஆம் திகதி வரை நடந்த பேருந்து விபத்துகள் தொடர்பான தகவல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி, 11 மாதங்களில் 198 பேருந்து விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

அவற்றுள் 50 இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து விபத்துக்களும், 148 தனியார் பேருந்து விபத்துக்களும் பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (அ)

# பிரதி பொலிஸ் மா அதிபர் பெயரில் பெரும் மோசடி!

## பொரளை பிரதேசத்தை சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது

கொழும்பு, ஜன. 06

பிரதி பொலிஸ் மாஅதிபர் என்ற போர்வையில் வர்த்தகர்கள் உள்ளிட்ட சிலரை ஏமாற்றிய குற்றச்சாட்டில் பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

வட்ஸ்அப் சமூக ஊடகம் மூலம் பணத்தை மோசடி செய்வதற்கு பிரதி பொலிஸ் மா அதிபர் ஒருவரின் பெயர் மற்றும் புகைப்படங்களைப் பயன்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதி பொலிஸ் மாஅதிபர் என்ற போர்வையில் தொழிலதிபர்களுக்கு தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு பொய்யான முறைப்பாடுகளைப் பதிவு செய்து வழக்குத் தாக்கல் செய்வதாக அச்சுறுத்தி நிதி மோசடியில் ஈடுபட்டமை தெரியவந்துள்ளது.

இதன்படி, கைது செய்யப்பட்ட சந்தேகநபர் புதுக்கடை இலக்கம் 01 நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

# படைமுகாமில் மின்சாரம் தாக்கி இறந்த யானையை துண்டு துண்டாக வெட்டி குளத்தில் வீசிய இராணுவம்

வவுனியா, ஜன. 06

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் இராணுவ முகாமில் மின்சாரம் தாக்கி இறந்த யானையை துண்டு துண்டாக வெட்டி குளத்தில் வீசியதாக மூன்று இராணுவத்தினர் வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, ஓமந்தை, கொம்புவைத்தகுளம் பகுதியில் உள்ள இராணுவ முகாமில் மின்சாரம் தாக்கி யானை ஒன்று கடந்த மாதம் இறந்துள்ளது. இறந்த யானையை இராணுவத்தினர் துண்டு துண்டாக வெட்டி குளத்துக்குள் வீசியதாகவும் அதன் உடற்பாகங்கள் குளத்தில் காணப்படுவதாகவும் பொதுமக்கள் தெரிவித்தையடுத்து வனஜீவராசிகள் திணைக்கள் மற்றும் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த விசாரணைகளையடுத்து மூன்று இராணுவத்தினர் நேற்று முன் தினம் வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மூவரையும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தனர். (அ)

# அரசாங்க உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத்தில் கௌரவிப்பு




யாழ்ப்பாணம்,ஜன.06

25 வருட அரச சேவையை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில், அரச அதிபர் ம. பிரதீபன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (எ)

# யாழ்ப்பாண பொலிஸாரை நெறிப்படுத்துவதற்கு கூட்டம்





யாழ்ப்பாணம், ஜன. 06

கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டத்துக்கு அமைவாக விபத்துக்களை கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸாரை நெறிப்படுத்தும் கூட்டம் ஒன்று நேற்று காலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காலிங்க ஜயசிங்க தலைமையில் இக் கூட்டம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் வீதி போக்குவரத்து கடமைகளில் ஈடுபடும் போக்குவரத்து பொலிஸார் கலந்துகொண்டனர்.

இவர்களுக்கு யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெ.ஏ.காலிங்க ஜய சிங்கவினால் கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டம் தொடர்பில் விளக்கம் அளிக்கப்பட்டது. (இ-05)

# தைப்பொங்கல் மக்கள் பண்டிகைக்கு பொங்கல் தயாரிக்க முடியாத நிலை!

## அரிசி மொத்த வியாபாரிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 06

இன்னும் ஒரு வாரத்துக்குப் பிறகு வரும் தைப்பொங்கல் பண்டிகைக்கு பொங்கல் தயார் செய்ய முடியாமல் சந்தையில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டுளளதாக புறக்கோட்டை அரிசி மொத்த வியாபாரிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வாக அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை விதித்தல், அரிசியை இறக்குமதி செய்தல், அரிசி விற்பனை செய்பவர்கள் மற்றும் கட்டுப்பாட்டு விலைக்கு அப்பால் கையிருப்பு பதுக்கி வைத்திருப்பவர்களை கண்டறிய விசாரணைகளை ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

மேலும், அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததுடன், அதற்கேற்ப 88,000 மெற்றிக் தொன் அரிசி இன்றுவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கடந்த பண்டிகை காலத்தை போன்று இன்றும் சந்தையில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, நாட்டின் சில பகுதிகளில் உள்ளூர் கச்சா மற்றும் நாட்டு அரிசிக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வர்த்தகர்களும் நுகர்வோரும் குற்றம் சுமத்துகின்றனர். (அ)

# காட்டு யானைகளை விரட்டுவதற்கு ஜி.பி.எஸ் தொழில்நுட்பம் அறிமுகம்

கொழும்பு, ஜன. 06

அநுராதபுரத்தின் பல பகுதிகளில் இருந்து காட்டு யானைகளை வில்பத்து வரை விரட்டுவதற்கு ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வனஜீவராசிகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, காட்டு யானைகளுக்கு ஜி.பி.எஸ் தொழில்நுட்பம் கொண்ட கழுத்துப் பட்டிகளை அணிவிக்கும் நடவடிக்கை ஓயாமடுவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்காக வனவிலங்கு அதிகாரிகள், இலங்கை கடற்படையினர் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து செயற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காட்டு யானைகள் நடமாடும் இடங்களை கண்டறிந்து அவற்றின் வழித்தடங்களை ஆய்வு செய்யும் நோக்கத்துடன் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வுகளுக்கு அமைவாக, இலங்கையில் பயிர்களை சேதப்படுத்தும் விலங்குகளில் யானைக்கு முக்கிய இடம் உண்டு.

அதனை மேலும் உறுதிப்படுத்தும் வகையில், நாட்டின் பல பகுதிகளில் இருந்து தினமும் காட்டு யானையால் ஏற்படும் சேதங்கள் தொடர்பான செய்திகள் பதிவாகி வருகின்றன.

அதன்படி, அநுராதபுரம் மாவட்டத்தில் பயிர்ச்சேதம் அதிகம் உள்ள பகுதிகளிலிருந்து காட்டு யானைகளை விரட்டும் நடவடிக்கை தொடங்கப்பட்டது.

அதற்கமைவாக அநுராதபுரம் காட்டு யானைகளை வில்பத்து தேசிய பூங்காவிற்கு விரட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அப்பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டதன் மூலம் பல பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக பிரதேசவாசிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
06.01.2025 திங்கட்கிழமை
பிலவ வருடம், மார்கழி 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ் கட்சிகள் சந்திக்கவேண்டிய புள்ளி

அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் (தேசிய) கட்சிகள் ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வரவேண்டும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்திருக்கின்றார். அது நல்ல விடயம். ஆனால் அந்தப் பொதுப் புள்ளி என்ன என்பதுதான் பிரச்னையானது.

2009இற்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களாக தமிழ்த் தேசிய ரீதியில் தங்களை அடையாளப்படுத்தும் கட்சிகளால் அரசியல் தீர்வு நோக்கிய நகர்வில் ஒரு சிறிய முன்னேற்றத்தைக் கூட காண்பிக்க முடியவில்லை. உண்மையில் கட்சிகளால் அவ்வாறான முன்னேற்றம் எதனையும் காண்பிக்க முடியாது என்பதுதான் உண்மை. முதலில் தமிழ் கட்சிகளின் தலைவர்களுக்கு தங்களுடைய ஆற்றல் என்ன என்பது தொடர்பில் ஒரு தெளிவான மதிப்பீடு இருக்க வேண்டும். அவ்வாறான மதிப்பீடு இல்லாமல் அரசியல் தீர்வு தொடர்பில் பேசுவதில் பயனில்லை.

2009இற்கு பின்னரான சூழலில் தமிழர் அரசியல் படிப்படியான பலவீனமான நிலைமையை நோக்கியே சென்றது. கொழும்புடன் பேரம் பேசக்கூடிய ஆற்றலுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இருக்கவில்லை - 2015இல் இடம்பெற்ற ஆட்சி மாற்றம்தான் ஒப்பீட்டடிப் படையில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குச் சாதகமான அரசியல் சூழலாக இருந்தது. ஆனால், அதனை கூட்டமைப்பு பயன்படுத்திக் கொள்ளவில்லை. புதிய அரசியல் யாப்பு என்னும் வர முடியாத ஒன்றை நோக்கி இலகுகாத்த கிளியாக காலத்தை விரயம் செய்தது. அன்றைய சூழலில் அரசியலமைப்பில் இருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தை அடித்தளமாகக் கொண்டு முன்னோக்கி பயணிப்பதற்கான வாய்ப்பு மிகவும் சாதகமாக இருந்தது. ஆனால், சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு பேருந்தை தவறவிட்டது. அதன் பின்னர் நிலைமைகள் மேலும் மோசமடைந்தன.

தற்போது முற்றிலும் மாறுபட்ட அரசியல் சூழலை தமிழ் கட்சிகள் எதிர்கொண்டிருக்கின்றன. ஆளும் தேசிய மக்கள் சக்தி தமிழ் மக்களின் ஆதரவுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான நாடாளுமன்ற பலத்துடன் இருக்கின்றது. இந்த நிலையில் தமிழ் கட்சிகள் எவ்வாறான அணுகுமுறையை கைக் கொள்ள வேண்டும்? - எதனைக் கைக்கொண்டால் அரசாங்கத்துடன் பேசுவதற்கான வாய்ப்பை உருவாக்க முடியும்? எந்த வழியில் பயணித்தால் வெளித் தரப்புகளின் ஆதரவை ஓரளவாவது பெறமுடியும் - குறிப்பாக இந்தியாவின் ஆதரவை கோரமுடியும்? இந்தக் கேள்விகளின் அடிப்படையில்தான் தமிழ் கட்சிகள் தாங்கள் ஒன்றுபட வேண்டிய பொதுப் புள்ளியை அடையாளம் காண வேண்டும்.

அவ்வாறில்லாது வழமைபோல் தங்களின் கடிவாளமில்லாத கற்பனைக் குதிரையில் சவாரி செய்ய முற்பட்டால் - தற்போதுள்ள வாயப்பும் இல்லாமல் போய்விடும். தமிழ் கட்சிகள் முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்தும் விடயத்தில் ஒரு புள்ளியில் சந்திக்க வேண்டும் - அதன் பின்னர் அரசியலமைப்பில் உள்ளவற்றை முதலில் முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்பதில் ஒன்றுபட வேண்டும். அதேவேளை, வடக்கு, கிழக்கை பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை வகுப்பதில் ஒன்றுபட வேண்டும். இதுதான் தமிழ் கட்சிகள் ஒன்றுபட வேண்டிய பொதுப் புள்ளி.




## குமார் பொன்னம்பலத்தின் நினைவுதினம் அனுஷ்டிப்பு

வவுனியா,ஜன.06

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25ஆவது ஆண்டு நினைவுதினம் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் நேற்றுக் காலை அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியாவில் குறித்த சங்கத்தினர் போராட்டம் முன்னெடுத்துவரும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாகவுள்ள கொட்டகையில் இந்த நினைவுதின நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, குமார் பொன்னம்பலத்தின் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (எ)

## போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் இருவர் கைது



வவுனியா, ஜன.06

ஒருதொகை போதை மாத்திரைகளுடன் இருவரை வவுனியா விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து யாழ்ப்பாணத்தில் இருந்து அம்பாந்தோட்டை நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தை வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் வழிமறித்த பொலிஸார் அதில் சோதனை நடத்தினர்.

இதன்போது மறைத்து வைக்கப்பட்ட நிலையில் பெருமளவான போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன.

அதனை உடைமையில் வைத்திருந்த தென்பகுதியைச் சேர்ந்த இருவர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டதுடன் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ-10)

## பொழுதுபோக்கு பூங்கா திறப்பு



முல்லைத்தீவு, ஜன.06


தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் 11. 68 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட முல்லைத்தீவு சின்னாறு பொழுதுபோக்கு பூங்கா, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிதி மூலம் புனரமைக்கப்பட்டு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ. உமாமகேஸ்வரன் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (எ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வாகனம் அடிக்கடி செலவு வைக்கும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். நம்பிக்கைக்குரியவர்களிடம் கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும்.

**மிதுனம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக் கட்டும். வாகன வசதிப் பெருகும். நினைத்ததை முடிப்பீர்கள் சாதிக்கும் நாள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் அநாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. சந்தேக புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கி கொள்ளாதீர்கள்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்துபோகும். மனைவி வழியில் அந்தஸ்து உண்டு. கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**துலாம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். தொட்டது துலங்கும் நாள்.

**விருட்சிகம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர் கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்க தொடங்குவீர்கள். அன்புத் தொல்லை குறையும்.

**தனுசு**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள்.

**மகரம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. புது வாகனம் வாங்குவீர்கள்.

**கும்பம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். உறவினர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். பாதியில் நின்ற வேலைகள் விரைந்து முடியும்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். சிலர் உங்களை தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். விட்டுகொடுத்து செல்ல வேண்டிய நாள்.



தெல்லிப்பழை காசி விநாயகர் தேவஸ்தானத்தில் கஜமுகசூரசங்கார உற்சவம் நடைபெற்றது.

# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்ற கஜமுக சூரசம்காரம்

யாழ்ப்பாணம்,ஜன.06

மானிப்பாய் மருதடி விநாயகர் கோவிலில் கஜமுக சூரசம்கார உற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

பெருங்கதை விரதத்தின் 20ஆம் நாளான நேற்று முன் தினம் மாலை வசந்த மண்டப பூஜைகள் நடைபெற்றதுடன் கஜமுக சூரசங்காரம் நடைபெற்றது.



இதன்போது, மானாட்டம், குதிரையாட்டம், மயிலாட்டம், சிலம்பம், பொய்க்கால் நடனம் மற்றும் கரகம் என்பன நடைபெற்றன. ஆயிரக்கணக்கான பக்தர்கள் இந்த சூரசங்காரத்தை கண்டுகளித்ததுடன், விநாயகப் பெருமானை வழிபட்டு இஷ்ட சித்திகளை பெற்றுச் சென்றனர். (எ-05)

# பாலத்தின் பாதுகாப்பு சீர் செய்யப்பட்டது

கிளிநொச்சி, ஜன.06

கிளிநொச்சியில் ஏ - 35 பிரதான வீதியில் புளியம்பொக்கணையில் அமைந்துள்ள பாலத்தின் பாதுகாப்பு சீர் செய்யப்பட்டுள்ளது.

குறித்த பாலத்தின் புனரமைப்புப் பணிகள் இடை நிறுத்தப்பட்டிருந்த நிலையில் பாதுகாப்பு குறியீடுகளோ, மின்விளக்குகளோ பொருத்தப்படாமல் இருந்தது.

இதன் காரணமாகவே கடந்த 31 ஆம் திகதி இடம் பெற்ற வீதி விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்தனர்.



இதனையடுத்து அப்பகுதிக்கு சென்ற வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகம் பாலத்தை பார்வையிட்டார்.

அவரது பணிப்புரைக்கு அமைவாக பாலத்தின் இரு பகுதியிலும் மின்விளக்கு பொருத்தப்பட்டுள்ளதுடன் வீதி பாதுகாப்பு குறிகாட்டிகளும் பொருத்தப்பட்டன. தற்போது, மக்கள் பாது காப்பாக பயணிக்கக் கூடிய வகையில் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (எ)

# தெல்லிப்பழை யுசிமாஸ் நிலைய மாணவர்கள் இந்தியாவில் சாதனை

யாழ்ப்பாணம், ஜன.06

2024ஆம் ஆண்டுக்கான மாபெரும் சர்வதேச மனக் கணிதப் போட்டியில் தெல்லிப்பழை யுசிமாஸ் நிலைய மாணவர் அணி சாதனை படைத்துள்ளது.

சர்வதேச மனக்கணிதப் போட்டி இந்தியாவின் புதுடில்லி பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் உலகளாவிய ரீதியில் 30 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 6,000 மாணவர்கள் பங்குபற்றினர்.

இதில், இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 103 மாணவர்கள் சென்றிருந்ததோடு, தெல்லிப்பழை யுசிமாஸ் நிலையத்தை சேர்ந்த மோஹ்னிஷ் ஹரி பிரஹித், அஸ்விதன் ஆகியோர் முதலாம் இடமும், லக்க்ஷகி, சுக்ரித் இரண்டாம் இடமும், தஷ்வின், அர்விதன், சங்கீத், பவிகேசன் ஆகியோர் மூன்றாம் இடமும் பெற்றனர். இந்த 8 மாணவர்களுக்கும் பல்வேறு தரப்பினரும் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். (எ)



# சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.06

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில்,

ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற 2025 ஆம் வருட வாராந்த முதல் நிகழ்வாக சண்முக வடிவேல் பாலேந் திரம் குழுவினரின் மங்கள இசையும் அம்பாறை, மாணிக் கமடு கிராமத்தில் அமைந்துள்ள வில் லூன்றி விநாயகர் ஆலயத்துக்கு 150,000 ரூபாய் நிதியும் நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. (எ-02)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசு அனைத்து குடிமக்களையும் சமமாக நடத்துவதில் உறுதியாக உள்ளது

## தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 06

**புதிய அரசாங்கம் அனைத்து குடிமக்களையும் சமமாக நடத்துவதில் உறுதியாக உள்ளது. கடந்த கால தவறுகளை திருத்திக்கொள்ள இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.**

நீதி மற்றும் பொறுப்புக்கூற லுக்கான மக்கள் ஒன்றிய இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரை யாற்றிய ஜெஹான் பெரேரா- 88, 89 மற்றும் 2009 இல் பெரும் துன்பம் ஏற்பட்டது. யாருக்கும் தெரியாது, அவர்க ளின் சகோதரர்கள் மற்றும் நண்பர்களுக்கு என்ன நடந்தது என்பது யாருக்கும் தெரியாது.

இந்த பிரச்சனைகள் எப்படி உருவானது என்பதை மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும். தவறுகள் இருப்பின் அவர்க ளுக்கு தண்டனை, அதாவது பொறுப்புக்கூறல் இருக்க வேண்டும். இவை மீண்டும் நடக்காமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். இப்பிரச் னைகளுக்கு தீர்வு காண முயல் கிறோம், இல்லையெனில் வெளிநாட்டு தலையீட்டை சந்திக்க நேரிடும். ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு எமது போரில் என்ன நடந்தது என்பது குறித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. 2015 இல், இந்த போரில் என்ன நடந்தது என்பதற்கு பொறுப்புக் கூறுவ தாக கடந்த அரசாங்கங்கள் உறுதியளித்தன. பின்னர் அமைந்த அரசு அதற்கு உடன் படவில்லை.

உள்ளூர் பொறி முறையின் மூலம் இந்த கேள்வி களுக்கான பதில்களைக் கண்டு பிடிக்க அவர்கள் முயன்றனர், ஆனால் அவை பலனளிக்க வில்லை-என் றார். (அ)

# பல்கலை மாணவர் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து அரசு ஆராய்வு

கொழும்பு, ஜன. 06

பல்கலைக்கழக மாணவர் கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து பிரதமர் ஹரிணி அமர சூரிய பல்கலைக்கழக அதிகாரி களுக்கு ஆலோசனை வழங்கி யுள்ளார்.

பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழுவின் அதிகா ரிகளுடன் இடம்பெற்ற கலந்து ரையாடலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர் களின் கல்வியைப் பாதிக்கும் அனைத்து பிரச்சினைகளையும் ஆராய்ந்து அவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டும். உயர்கல் விக்கென ஒதுக்கப்பட்ட நிதி உரியமுறையில் பயன்படுத்தப் படல் வேண்டும் எனவும் பிரத மர் ஹரிணி அமரசூரிய தெரி வித்துள்ளார். (அ)

# ஜனாதிபதி-சட்டமா அதிபர் இன்று கலந்துரையாடல்

கொழும்பு, ஜன. 06

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் சட்டமா அதிபருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

கடந்த பருவ காலத்தில் சர்ச்சையை ஏற்படுத்திய வழக் குகளின் முன்னேற்றம் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, குற்ற வழக்கு களை பராமரிப்பதில் ஏற்படும் சிரமங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்படவுள்ளதாக தெரி விக்கப்படுகிறது. (அ)

# நோயாளரைப் பார்வையிடச்சென்ற பெண்ணிடம் தங்க நகை கொள்ளை

## வைத்தியசாலை சிற்றூழியர் கைது

கொழும்பு, ஜன. 06

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் நோயாளர் ஒருவ ரைப் பார்வையிட பிரவேசித்த பெண்ணொருவரிடமிருந்து, சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை கொள்ளையிட்டு தப்பிச் சென் றதாகக் கூறப்படும் அந்த வைத் தியசாலையின் சிற்றூழியர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர், வைத்தியர் என்ற போர்வையில் தம்மை அடையாளப்படுத்தி இந்த சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

நோயாளிக்குப் பரிசோ தனை செய்யவேண்டியுள்ள தால் அவரது நகைகளைக் கழற்றித் தருமாறு அந்த நோயா ளியைப் பார்வையிட வந்த பெண்ணிடம் கூறிய சிற்றூ ழியர், நோயாளியின் தங்க நகைகளைப் பெற்று அங்கி ருந்து தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் மரு தானை பொலிஸில் முன்னெ டுக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன் றில் முன்னிலைப்ப டுத்தியதை யடுத்து, அவரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# எதிர்வரும் 10ஆம் திகதிக்கு பின் இறக்குமதி செய்யப்படும் அரிசி திருப்பி அனுப்பப்படும்

கொழும்பு, ஜன. 06

தற்போது வழங்கப்பட்டுள்ள அனுமதிக்கு அமைய, எதிர் வரும் 10ஆம் திகதிக்கு பின்னர் வர்த்தகர்களால் அரிசி இறக் குமதி செய்யப்பட்டால் அவை மீண்டும் திருப்பி அனுப்பப்ப டும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அரிசி இறக்குமதிக்காக வழங்கப்பட்ட கால அவகாசம் எதிர்வரும் 10ஆம் திகதி நள்ளி ரவு 12 மணியுடன் நிறைவடை வதாகவும் அவர் சுட்டிக்காட்டி னார்.

கடந்த 31ஆம் திகதி வரை 86,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ள தாகவும் அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார். (அ)

# மாணவரிடையே புகையிலை சார்ந்த உற்பத்திகளின் பயன்பாடு அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 06

பாடசாலை மாணவர்க ளிடையே புகையிலை சார்ந்த உற்பத்திகளின் பயன்பாடு அதி கரித்துள்ளதாக விசேட வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

உடலுக்கு தீங்கு விளைவிக் கும் பல்வேறு வகையான சிகரெட்டுகளை மாணவர்கள் பாவிப்பது ஆபத்தானது என காலி தேசிய வைத்தியசாலை யின் விசேட உளநல வைத்திய நிபுணர் ரூமி ரூபன் தெரிவித்தார்.

அத்துடன் குறித்த மாண வர்களைப் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு பெற்றோர்க ளுக்கும் ஆசிரியர்களுக்கும் உள் ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# போக்குவரத்து நெரிசலைக் குறைக்க திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்

கொழும்பு, ஜன. 06

கிளின் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்துக்கு நிகராக, வாகன விபத்துக்கள் மற்றும் போக்கு வரத்து நெரிசலை குறைக்கும் வகையில் இரண்டு போக்கு வரத்துத் திட்டங்களை நடை முறைப்படுத்த இலங்கை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதில் முதலாவது நடவடிக் கையாக, பல்வேறு விதமான வாகன ஒலிகள், அதநக சத்தத் தில் ஒலி எழுப்புதல், ஒலி எழுப் பும் சைலன்சர்கள் பொருத்து தல், விபத்துக்கள் மற்றும் ஆபத்தை விளைவிக்கும் வகை யில் வண்ணங்கள் கொண்ட விளக்குகளை பொருத்துதல், சட்டவிரோதமாக அசெம்பிள் செய்யப்பட்ட வாகனங்கள் என்பன தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட வுள்ளது.

இதன் இரண்டாவது நடவ டிக்கையாக, பொதுப் போக்கு வரத்து பஸ் சாரதிகள் செய்யும் போக்குவரத்து விதிமீறல்க ளைக் கண்டறிந்து, அந்த குற்றங்களுக்கான சட்டத்தை அமுல்படுத்துவதாகும்.

சாரதிகள் மற்றும் பொதுமக் களை அறிவுறுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கைகள் நேற்று முன் தினம் முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை இரண்டு வாரங்களுக்கு முன்னோடித் திட்டமாக நடைமுறைப் படுத்தப்பட உள்ளன.

இதன்போது வாகன சாரதிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு, வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள மேலதிக உதிரிப்பாகங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் அகற்றுமாறு சாரதிகளுக்கு அறிவுறுத்தப்ப டும் என பொலிஸார் தமது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி, குற்றங்கள் தொடர்பிலான தகவல்களை பெற்று சட்டத்தை நடைமு றைப்படுத்த பொது போக்குவ ரத்து பஸ்களில் சிவில் உடை அணிந்த பொலிஸார் நியமிக் கப்படுவார்கள் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (அ)

# நீதி, பொறுப்புக் கூறலுக்கான மக்கள் கூட்டமைப்பு இணையத்தளம் அறிமுகம்

கொழும்பு, ஜன. 06

நீதி மற்றும் பொறுப்புக்கூற லுக்கான மக்கள் கூட்டமைப்பு இணையத்தளம் நேற்று பண் டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அங்குரார்ப்ப ணம் செய்து வைக்கப்பட்டது.

இது இனப் பிளவுகளைக் கடந்து நீதி மற்றும் பொறுப் புக்கூறல் செயல்முறைக்கு பொதுமக்களின் ஆதரவை உருவாக்கும் என்று நம்பப்ப டுகிறது.இந்த இணையத்தளம் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் அநீதிக்கு ஆளானவர் களின் கதைகளின் தொகுப்பை வழங்குவதுடன், பாதிக்கப்பட் டவர்களின் கதைகளை குறிப்பி டுவதற்கான வாய்ப்பையும் வழங்கும்.

இலங்கை தேசிய சமாதானப் பேரவை மற்றும் மனித உரிமை கள் அமைப்பான ரைட் லைப் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.

இந்நிகழ்வில் இலங்கை தேசிய சமாதானப் பேரவை உத்தியோகத்தர்கள், துறைசார் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (அ)

# ரோஹிங்கியா அகதிகளை நாடு கடத்தும் உடன் தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்க!

கொழும்பு, ஜன. 06

முல்லைத்தீவு கடற்பகுதியில் கடந்த டிசெம்பர் 19ஆம் திகதி மீட்கப்பட்ட ரோஹிங்கியா அகதிகளை நாடு கடத்தும் தீர் மானத்தை, அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான், ஜனாதிபதி அநுர திஸாநாயக்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மியன்மாருக்கு அகதிகளைத் திருப்பி அனுப்புவது அவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக் கும் என்றும், துன்புறுத்தல் அச்சுறுத்தல்களை எதிர்கொள் ளும் நாட்டிற்கு தனிநபர்களை அனுப்புவதைத் தடைசெய்யும் சர்வதேச மறுசீரமைப்பு கொள் கைகளை மீறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# சிறுமிக்கு ஆபாசக் காணொளி அனுப்பிய படைச்சிப்பாய் கைது!

கொழும்பு, ஜன. 06

பதின்மூன்று வயதுடைய பாடசாலை மாணவியான சிறு மியை அச்சுறுத்தி தனது கைய டக்கத் தொலைபேசியில் ஆபா சமான குறுஞ்செய்திகள் மற்றும் காணொளிகளை அனுப்பிய இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டதாக சிறி புர பொலிஸார் தெரிவித்தனர்.

தந்திரிமலை இராணுவ முகாமிற்குட்பட்ட பதவி பராக்கிரமபுர பிரதேசத்தில் வசிக்கும் 28 வயதுடைய இராணுவச் சிப்பாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட் டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளார். சிறிபுர பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்கட்டணத்தை குறைந்தபட்சம் 2 வீதமேனும் குறைக்க வேண்டும்!

## ஓமல்பே சோபித தேரர் கோரிக்கை

கொழும்பு, ஜன. 06

**செல்வந்த தரப்பினரின் 35 பில்லியன் ரூபா மின்கட்டணம் நிலுவையில் உள்ள நிலையில் மின்கட்டணத்தை அதிகரித்து நடுத்தர மக்களை பழிவாங்குவது முறையற்றதொரு செயற்பாடாகும்.**

மின்சார சபை இலாபமடைந்துள்ள நிலையில் இம்முறை மின்கட்டணத்தை குறைந்தபட்சம் 25 சதவீதத்திலேனும் குறைக்கவேண்டும் என தேசிய மக்களவை அமைப்பின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

மின் பாவனையாளர் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



இதனை அரசு விரைவாக நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும் அவர் கோரினார். (அ)

# நாய்களுடன் அரிசி மூடைகள் கொண்டு வந்த சாரதி கைது!

கொழும்பு, ஜன. 06

இரண்டு நாய்களுடன் அரிசி மூடைகளை கொண்டு வந்த சாரதி, பொது பாதுகாப்பு பரிசோதகர்களின் உதவியுடன் கைது செய்யப்பட்டார். இந்த மூடைகள் பலாங்கொடை நகரின் கடைகளுக்கு விநியோகிக்கப் பணி மேற்கொள்ளப்படுவதாக தெரியவந்தது. சம்பவம், பலாங்கொடை நகரின் பிரதான பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள ஒரு கடையின் அருகே நடைபெற்றது. அங்கு, லொறியில் அரிசி மூடைகளை இறக்கும்போது, நாய்கள் மூடைகளுக்கு இடையில் இருந்ததை கண்ட ஒரு நகரவாசி, அதை கைத்தொலைபேசியில் பதிவு செய்து பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அனுப்பினார்.

அதன்பேரில், அதிகாரிகள் லொறியை கைப்பற்றி மேலதிக விசாரணைகள் மேற்கொண்டனர். அந்த லொறியில் 21 இலட்சம் ரூபாவுக்கும் அதிக விலைக்கு விற்கப்படக்கூடிய அரிசி கையிருப்பு இருந்ததாகவும், இந்த லொறி திஸ்ஸமஹாராமவில் உள்ள ஒரு அரிசி ஆலைக்கு சொந்தமானது என்றும் விசாரணைகள் மூலம் தெரியவந்தது. (அ)

# சட்டவிரோதமாக கொண்டு வந்த தங்கத்துடன் நேற்று ஒருவர் கைது

கொழும்பு, ஜன. 06

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட தங்க பொருட்களுடன் சந்தேக நபர் ஒருவர் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

அபுதாபியில் இருந்து இலங்கைக்கு வந்த பயணி ஒருவர் தொடர்பில் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விமான நிலைய பொலிஸார் சந்தேக நபரை நேற்று முன் தினம் இரவு கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் கைது செய்யப்பட்டபோது, அவர்களிடமிருந்து 4 தங்க நெக்லஸ்கள், 1 பென்டன், 02 வளையல்கள், 2 தங்க வளையல்கள் மற்றும் ஒரு தங்க மோதிரம் ஆகியவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வெலம்பொட பகுதி யைச் சேர்ந்த 25 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (அ)

# மீன்பிடிக் கப்பல் மூலம் இலங்கை வந்த போதைப்பொருள் குறித்து விசாரணை!

கொழும்பு, ஜன. 06

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேமல் பிரசாந்தவின் பணிப்புரையின் பேரில், கடந்த வருடம் ஒக்டோபர் 31ம் திகதி, மீன்பிடிக் கப்பல் மூலம் இலங்கைக்கு போதைப்பொருள் ஒருதொகை கொண்டுவரப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் தலைமையகத்தினால் நேற்று ஊடகங்களுக்கு விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளின்போது தெரியவந்த தகவலின் அடிப்படையில், குறித்த மீன்பிடிக் கப்பலின் உரிமையாளரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட மைக்ரோ பிஸ்டல், மகசீன் மற்றும் 04 தோட்டாக்கள், சந்தேக நபர் வீடொன்றில் மறைத்து வைத்திருந்ததை கண்டுபிடித்துள்ளனர்.

அவருக்கு துப்பாக்கியை வழங்கியதாக சந்தேகிக்கப்படும் மற்றொரு நபரும் அதே அலுவலக அதிகாரிகளால் ஹிக்கடுவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 30 மற்றும் 33 வயதுடைய வெரல்லான மற்றும் ஜிந்தோட்டை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்பதுடன், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சுற்றுலா விஸாவில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் வெளிநாட்டவரை தடுக்கவேண்டும்!

## சுற்றுலா கைத்தொழில் ஒன்றியம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 06

சுற்றுலா விஸாவில் இலங்கைக்கு வருகை தந்து பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குறித்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்காவிடின் தேசிய தொழிற்றுறையினர் பாதிக்கப்படுவார்கள். காலி மாவட்டத்தில் உக்ரைன், ரஷ்யா நாட்டு பிரஜைகள் முறையற்ற தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என சிறு மற்றும் நடுத்தர சுற்றுலா கைத்தொழில் ஒன்றியத்தின் தலைவர் சமீர சேனக டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சுற்றுலா விஸா ஊடாக இலங்கைக்கு வருகைத் தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் முறையற்ற தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். குறிப்பாக தெற்கு மாகாணத்தில் காலி மாவட்டம் சுற்றுலா மையங்களில் சுற்றுலாப் பயணிகள் பல வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இவர்களினால் அரசாங்கத்துக்கு எவ்வித வருமானமும் கிடைப்பதில்லை.

காலி உனவட்டுன பகுதியில் சுற்றுலா விஸா முறையில் வருகை தந்துள்ள ரஷ்யா மற்றும் உக்ரைன் நாட்டு பிரஜைகள் பல்வேறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். குறிப்பாக சுற்றுலா சேவை கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இவர்களுக்கும், தேசிய தொழிற்றுறையினருக்கும் முரண்பாடுகள் தோற்றம் பெறுவது தற்போது வழமையாகிவிட்டது.

உனவட்டுன பகுதியில் ரஷ்யா, உக்ரைன் நாட்டு பிரஜைகள் சுற்றுலா சேவை கைத்தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் இலங்கையர் மீது தாக்குலை நடத்தியுள்ளார்கள்.

இவ்விடயம் குறித்து அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும். சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் சுற்றுலா கைத்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டால் தேசிய தொழிற்றுறையினர் பாதிக்கப்படுவார்கள்.

ஒரு சில சுற்றுலா பயணிகள் இலங்கையில் நிலங்களை மாற்று வழிமுறைகளில் கொள்வனவு செய்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.இவ்வாறான செயற்பாடுகள் எதிர்காலத்தில் மாறுப்பட்ட சிக்கல்களை ஏற்படுத்தும். ஆகவே இவ்விடயம் குறித்து அரசாங்கம் அவதானத்துடன் செயற்பட வேண்டும்- என்றார். (அ)

# திரிபோஷ நிறுவனத்தை மறுசீரமைக்க தீர்மானம்

கொழும்பு, ஜன. 06

கந்தானையில் அமைந்துள்ள திரிபோஷ நிறுவனத்தை நாட்டு மக்களின் போசாக்கு தேவையை பூர்த்தி செய்யும் வகையில் மறுசீரமைத்து, அதனை அரசாங்கத்துக்கு சொந்தமான நிறுவனமாக தொடர்ந்து நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

திரிபோஷ நிறுவனத்தின் தற்போதைய நிலைமை மற்றும் அதன் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து சுகாதார அமைச்சர் தலைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த திரிபோஷ நிறுவனத்தை அபிவிருத்தி செய்து அதன் பலன்களை மக்களுக்கு வழங்குவதற்கு முன்னைய அரசாங்கங்கள் முறையான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தாத காரணத்தினாலேயே அதன் பலன்களை மக்களால் பெறமுடியாமல் போனதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிலையை மாற்றி மீண்டும் இந்நாட்டு மக்களின் போசாக்கு தேவைகளை வழங்கும் செயலூக்கமான நிறுவனமாக திரிபோஷவை மாற்ற தற்போதைய அரசாங்கம் செயற்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

திரிபோஷ நிறுவனத்தைக் கலைப்பதற்கு பதிலாக, நாட்டு மக்களின் முன்னேற்றம் மற்றும் ஊட்டச்சத்து தேவைகளுக்காக இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றப்பட்டு, முறையான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரசுக்குச் சொந்தமான மேம்பட்ட நிறுவனமாக தொடர்ந்து நடத்தப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# கோழி இறைச்சியின் விலை மாற்றமில்லை

கொழும்பு, ஜன. 06

நாட்டில் தற்போது முட்டை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தாலும் கோழி இறைச்சியின் விலை குறைவடையவில்லை என அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகசந்திப்பில் அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், முட்டை மற்றும் கோழி இறைச்சிக்கு விதிக்கப்பட்டுள்ள வெற் வரி குறைக்கப்பட்டால் இறைச்சி சார்ந்த உணவுப்பொருட்களின் விலையைக் குறைக்க முடியும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# 500 மில்லியன் ரூபா இழப்பீடு கோரும் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைவர்

கொழும்பு, ஜன. 06

ஐக்கிய மக்கள் சக்தியின் தொழிற்சங்கத் தலைவர் ஆனந்த பாலித வெளியிட்ட அறிக்கை காரணமாக, தனது நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து, 500 மில்லியன் ரூபா முதலீட்டை செலுத்துமாறு கோரி அறிவித்தல் அனுப்ப இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே.ராஜகருணா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

வேண்டுமென்றே திட்டமிட்டு பொய்யான மற்றும் தீங்கிழைக்கும் பிரசாரங்களுக்காக தனக்கு இழப்பீடு வழங்கக் கோரி சட்டத்தரணிகள் ஊடாக அவர் அறிவித்தல் அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி சட்டத்தரணி சம்பத் யாலேவத்தவினால் குறித்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதானி குழுமத்தின் திட்டங்கள் குறித்து ஆராயக் குழு நியமிப்பதற்கு யோசனை!


## அமைச்சரவையில் முன்வைக்க தீர்மானம்

கொழும்பு, ஜன. 06

**இலங்கையில் முன்னெடுப்பதற்குத் திட்டமிட்டுள்ள அதானி குழுமத்தின் வலுசக்தி திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்குக் குழுவொன்றை நியமிப்பதற்கான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.**

இன்று இடம்பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த யோசனை முன்வைக்கப்பட உள்ளதாக வலுசக்தி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னார் மற்றும் பூநகரி ஆகிய பிரதேசங்களில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள காற்றாலை மின் திட்டங்கள்



தொடர்பிலேயே இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தொல்பொருள் அகழ்வில் ஈடுபட்ட ஏழு பேர் கைது !

கொழும்பு, ஜன. 06

பழங்காலப் பொருட்களை பெறும் நோக்கில் சட்டவிரோதமாக அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் 7 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தெஹியோவிட்ட - அட்டுலுகம, மீவலகந்த பிரதேசத்தில் இடம்பெற்ற அகழ்வு நடவடிக்கை தொடர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 25 முதல் 56 வயதுக்கு இடைப்பட்ட சீதுவ மற்றும் தெஹியோவிட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

சோதனையிடப்பட்ட இடத்தில் பூஜை பொருட்கள் உள்ளிட்ட அகழ்வு நடவடிக்கைகளுக்க பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெஹியோவிட்ட பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# சிகிரியா குன்றில் மின்தூக்கி நிறுவுவது குறித்து அவதானம்!

கொழும்பு, ஜன. 06

சிகிரியா குன்றில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக மின்தூக்கியை நிறுவுவது குறித்து அவதானம் செலுத்தப்படவுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிகிரியா மற்றும் அதனை சூழவுள்ள சுற்றுலாப் பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பில் அண்மையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது இந்த விடயம் குறித்த கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிகிரியாவுக்கு பிரவேசிக்கு முதியவர்கள், விசேட தேவையுடையவர்கள் மற்றும் நோயுற்றவர்களை இலகுவாக அழைத்துச் செல்வது போன்ற விடயங்களில் கவனம் செலுத்தும் வகையில் இந்த திட்டம் முன்மொழியப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அத்துடன், இந்த கலந்துரையாடலில், பௌர்ணமிக்கு முந்தைய நாள், பௌர்ணமி தினம் மற்றும் அதற்குப் பின்னரான இரண்டு நாட்களிலும் இரவு நேரத்தில் சீகிரியா குன்றை பார்வையிடுவதற்கு அனுமதி வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த முன்மொழிவுகள் குறித்து இறுதி முடிவு எட்டப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# வரலாற்றில் 3ஆவது முறையாக 2024 ஆம் ஆண்டு பதிவான அதிக சுற்றுலாப் பயணிகளின் வருகை

கொழும்பு, ஜன. 06

சுற்றுலாத்துறை வரலாற்றில் மூன்றாவது மிக உயர்ந்த வருடாந்தர சுற்றுலாப் பயணிகள் வருகை 2024 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளது.

இதற்கு அமைய கடந்த ஆண்டில் 20 லட்சத்து 53 ஆயிரத்து 465 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர். இதன் மூலம் இலங்கை சுற்றுலாத் துறை மேலும் ஒரு மைல்கல் சாதனையை அடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, வருடாந்தர சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 38.07 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

ஏப்ரல் 21 தாக்குதலுக்கு பின்னர் நாட்டிற்கு வருகை தரும் பயணிகளின் எண்ணிக்கை பாரிய அளவில் குறைந்தது.

கடந்த 2019 ஆம் ஆண்டில் 30 லட்சம் பயணிகள் வருகை தருவர் என்ற இலக்கை கொண்டிருந்த போதிலும் பயங்கரவாத தாக்குதலால் அந்த நம்பிக்கை முற்றாக சிதைக்கப்பட்டதாக சுற்றுலாத் துறையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அந்த நிலை தற்போது சுற்றுலா பயணிகளின் வருகை படிப்படியாக அதிகரித்து எதிர்பார்த்த எண்ணிக்கையை விட கணிசமான முன்னேற்றத்தை எட்டியுள்ளதாக சுற்றுலா தொழில் வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், மாலைதீவு மற்றும் தாய்லாந்து போன்ற பிராந்திய போட்டியாளர்களை விட இலங்கையின் வருடாந்த பயணிகள் வருகை மிகவும் பின்தங்கியுள்ளது.

சுற்றுலா பயணிகளின் வருகையை பொறுத்த மட்டில், கடந்த ஆண்டு இந்தியாவில் இருந்து நான்கு லட்சத்து 16 ஆயிரத்து 974 வருகை தந்திருந்தனர்.

அதேபோல ரஷ்யா, இங்கிலாந்து, ஜேர்மனி, சீனா, மாலைதீவு, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்து வருகை தந்தவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெளிநாடு செல்ல பணம் சேர்ப்பதற்கு போதைப்பொருள் விற்ற யுவதி கைது!

கொழும்பு, ஜன. 06

டுபாயில் மறைந்திருந்த ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி மற்றும் போதைப் பொருள் கடத்தல்காரரினால், இலங்கையில் இயக்கப்படும் போதைப்பொருள் வலையமைப்பில் இணைந்து, போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டிருந்த 20 வயதுடைய பட்டதாரி யுவதியொருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டதாக ஹன்வெல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சந்தேக நபர் இரண்டு தனியார் பல்கலைக்கழகங்களில் இரண்டு பட்டங்களை பெற்றுள்ளதாகவும், வெளிநாடு செல்வதற்கு தேவையான பணத்தை தேடி போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்ததாகவும் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹன்வெல்ல நகரில் யுவதியொருவர் ஐஸ் போதைப்பொருள் விநியோகம் செய்வதாக தனிப்பட்ட தகவலறிந்தவர் ஊடாக கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் குழுவொன்று சென்று சந்தேக நபரை கைது செய்தது.

டுபாயில் தலைமறைவாக உள்ள போதைப்பொருள் வர்த்தகரின் வலையமைப்பிலுள்ள ஹங்வெல்ல பிரதேச பொறுப்பாளருடன் அவரது உறவினருக்கு நெருங்கிய தொடர்பு இருப்பதால், சந்தேக நபர் அந்த உறவின் அடிப்படையில் ஐஸ் போதைப்பொருளை பெற்று விற்பனை செய்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. சந்தேகநபர் கல்வி கற்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் போதைப்பொருள் விற்பனை செய்துள்ளதாக ஹன்வெல்ல பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹங்வெல்ல நகருக்கு அருகில் வசிக்கும் 20 வயதுடைய யுவதியொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

# உலக வங்கி உதவியுடன் கல்வித் திட்டங்களை முன்னேற்றுவது குறித்து பிரதமர் அவதானம்!

கொழும்பு, ஜன. 06

இலங்கையின் பாடசாலைக் கல்வியை நவீனமயப்படுத்தும் வேலைத்திட்டத்தின்கீழ் உலக வங்கியின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பில் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலின்போது, கடந்த சில வருடங்களாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலைகளுக்காக செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், மாணவர்களின் சுகாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், இடைநிலைக் கல்விக்கான தகவல் தொழில்நுட்பப் பாடப் பகுதியை மேம்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெள ஆகியோர் கலந்துகொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# கடற்றொழில் சட்டம் தொடர்பில் ஐரோப்பிய நாடுகளுடன் பேச்சு!

## அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்

யாழ்ப்பாணம், ஜன. 06

கடற்றொழில் தொடர்பான புதிய சட்டம் கொண்டுவரப்படும்போது, ஐரோப்பிய நாடுகளுடனும் அது தொடர்பில் கலந்துரையாடப்படும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்துடனான சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார்.

அதேநேரம், கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தில் வடக்கு மாகாண மீனவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள் மனுஷ நாணயக்காரவிடம் வாக்குமூலம்!

கொழும்பு, ஜன. 06

வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்கும் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் முன்னாள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவிடம் வாக்குமூலம் பெறப்பட உள்ளதாக விசாரணைக் குழுக்கள் தெரிவிக்கின்றன.

எதிர்கால விசாரணைகளில் வெளிவரும் தகவல்களின் அடிப்படையில் இது தொடர்பான வாக்குமூலம் பெறப்படும் என விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸ் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நிதி மோசடி சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரர் திசர நாணயக்கார இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பின்லாந்தில் வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறி 30 இலட்சம் ரூபாவினை பெற்று மோசடி செய்தமை தொடர்பில் கம்பஹா பகுதியைச் சேர்ந்த ஒருவர் திசர நாணயக்காரவுக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தார். குறித்த முறைப்பாட்டின் பிரகாரம் கடந்த டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி பிபிலை பகுதியில் வைத்துக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் அவரைக் கைது செய்தனர்.

நிதி மோசடி தொடர்பான முறைப்பாடுகள், குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்குத் தொடர்பான சாட்சியங்களும் பெறப்பட்டு வருகின்றன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுக அதிகார சபையால் மக்களின் காணிகள் அபகரிப்பு

திருகோணமலை, ஜன.06

**திருகோணமலையில் துறைமுக அதிகார சபையால் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. இவற்றை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.**



திருகோணமலை பட்டனமும் சூழலும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன், மக்கள் எதிர்கொள்ளும் பல பிரச்னைகளை வெளிக்கொண்டு வந்தார்.

துறைமுக அதிகார சபை கையகப்படுத்தியுள்ள 5226 ஏக்கர் நிலப்பகுதியில் 1887 ஏக்கர் நிலப்பகுதியில் மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். எனவே, இந்தப் பகுதியை உடனடியாக மக்களுக்கு வழங்க வேண்டுமென கூறினார்.

இதேபோன்று, வெல்லா வெளியில் அரசாங் கத்தால் கையகப் படுத்தப்பட்ட நிலத்தையும் உடனடியாக விடுவித்து உரிமையாளர்களுக்கு வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

திருகோணமலை நகரத்தில் அமைந்துள்ள மக்ஹறய்சர் விளையாட்டு அரங்கம், பாரம்பரியமாக திருகோண மலையில் பல சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கித் தந்தது எனவும் இந்த விளையாட்டு அரங்கை மீண்டும் சரிசெய்து உருவாக்குவதன் மூலம் பல இளம் விளையாட்டு வீரர்களது ஏக்கத்தை தீர்ப்பதோடு, சர்வதேச போட்டிகளை நடத்தி வருமானத்தை அதிகரிக்க முடியும் என்றும் குறிப்பிட்டார். (எ)

## ரஷ்ய கூட்டமைப்பு தூதுவருக்கும் ஆளுநருக்கும் இடையே சந்திப்பு



திருகோணமலை, ஜன.06

கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர மற்றும் இலங்கைக்கான ரஷ்ய கூட்டமைப்பின் தூதுவர் லெவன் எஸ். டிழஹர்யன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஆளுநரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது, இலங்கைக்கு மனிதாபிமான உதவியின் கீழ் ரஷ்ய கூட்டமைப்பிடம் இருந்து பெறப்பட்ட உரத் துக்கு தாம் மிகவும் நன்றிக் கடன்படுவதாக கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார். எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்துடனும் இலங்கையுடனும் மிக நெருக்கமாக செயல்பட்டு நாட்டின் அபிவிருத்திக்கு அதிகபட்ச ஆதரவை வழங்குவதாக ரஷ்யத் தூதுவர் தெரிவித்தார். (எ)

## திருக்கோவில் பிரதேச செயலகம் மீண்டும் தேசிய ரீதியில் சாதனை

திருக்கோவில், ஜன.06

திருக்கோவில் பிரதேச செயலகம் மீண்டும் தேசிய ரீதியில் சாதனை படைத்துள்ளது.

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதிய திட்டத்தில் அதிகளவான அங்கத்தவர்களை இணைத்துக் கொண்டதில் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலகமானது மாவட்டத்தில் முதலாவது இடத்தையும் தேசிய ரீதியாக மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது .

குறித்த பிரதேச செயலகமானது தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாகவும் இந்த விருதை பெற்றுள்ளது.

இதற்கான சான்றிதழ் மாவட்ட செயலாளரால் வழங்கப்பட்டது. (எ)

# காயான்கேணி கடற்கரையில் ஒதுங்கிய உருளை வடிவதாங்கி

மட்டக்களப்பு, ஜன.06

மட்டக்களப்பு வாகரை காயான்கேணி கடற்கரையில் இரும்பிலான உருளை வடிவ தாங்கி ஒன்று கரையொதுங்கியுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

கடலில் மிதந்து வந்த குறித்த உருளையை பிரதேச மீனவர்கள் மற்றும் கடற்படையினர் இணைந்து கரைசேர்த்தனர்.

இது ஆழ்கடலில் தரித்து நிற்கும் கம்பல்களின் உதிரிப்பாகமாகவோ அல்லது அவற்றின் ஏனைய செயல்பாடுகளுக்கு பயன்படுத்தும் பொருளாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதனை பிரதேச மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். இதேவேளை, கடந்த வாரம் வாகரை பால்சேனை கடற்கரையில் மியன்மார் நாட்டு படகு என நம்பப்படும் மிதப்பொன்றும் கரையொதுங்கியிருந்தது. (எ)



## நீர்நிலைக்குள் வீழ்ந்த குழந்தை உயிரிழப்பு!

மட்டக்களப்பு, ஜன.06

பெற்றோரின் கவனயீனம் காரணமாக நீர்நிலைக்குள் வீழ்ந்து ஒன்றரை வயது குழந்தை உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு, போரதீவுப் பற்று இளைஞர் விவசாயத்திட்டத்தில் நேற்று முன்தினம் காலை நீரோடையில் விழுந்து விகான் என்னும் குழந்தையே உயிரிழந்தது. குறித்த நீர் நிலைக்கு அருகில் உள்ள வீட்டி லிருந்து குழந்தை தத்திநடந்து வந்து நீரோடைக்குள் விளையாடிக் கொண்டிருந் தபோது நீருக்குள் மூழ்கி உயிரிழந்தது. (எ)

## "ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவோம்" கிண்ணியாவில் க்ளீன் சிறீலங்கா வேலைத்திட்டம்

திருகோணமலை, ஜன.06

"ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவோம்" என்ற தொனிப்பொருளின் கீழ், டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று கிண்ணியா தள மருத்துவமனையில் இருந்து ஆரம்பித்து, பிரதான வீதி ஊடாகச் சென்று திருகோணமலை - மட்டக்களப்பு வீதியில் அமைந்துள்ள சுகாதார ஊழியர் விடுதியை சென்றடைந்தது.

இதன்பின்னர், சுகாதார ஊழியர்கள் விடுதி அமைந்துள்ள வளாகத்தை சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

கிண்ணியா தள மருத்துவமனை, கிண்ணியா நகர சபை மற்றும் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியன இணைந்து, இந்த க்ளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தை முன்னெடுத்தன.



இந்த நிகழ்வில் கிண்ணியா பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எம். ஏ. எம். அஜித், கிண்ணியா நகர சபையின் செயலாளர் எம். எம். அனஸ், கிண்ணியா மருத்துவமனையின் பதில் வைத்திய அத்தியட்சகர் ஹிஸ்புல்லா ஹில்மி மற்றும் பதில் சட்ட வைத்திய அதிகாரி எம். ஏ. எம். ஜிப்ரி, சுகாதார ஊழியர்கள் மற்றும் மருத்துவமனை ஊழியர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர். (எ)

## திருகோணமலை கடற்கரையில் கரையொதுங்கிய ஆணின் சடலம்

திருகோணமலை, ஜன.06

திருகோணமலை சமுத்திராகம கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியது.

திருகோணமலை, ஆண்டாங்குளம் பகுதியைச் சேர்ந்த அஜித் பிரசன்னா (வயது- 53) என்பவரின் சடலமே இவ்வாறு கரையொதுங்கியது என திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.(எ)



காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கம் வருடா வருடம் நடத்திவரும் திருப்பள்ளி எழுச்சி ஊர்வலத்தை ஒட்டிய திருவாசக முற்றோதல் சிறீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் ஆரம்பமாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈக்குவடோரில் உள்நாட்டு கலவரம் இராணுவ அவசர நிலை பிரகடனம்

குயிட்டோ, ஜன.06

**ஈக்குவடோரில் 7 மாகாணங்களில் உள்நாட்டு கலவரம் வெடித்தது. இதனால், அங்கு இராணுவ அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது.**

தென் அமெரிக்க நாடான ஈக்குவடோரில் பல கிளர்ச்சி குழுக்கள் செயல்படுகின்றன. அவற்றில் பல ஆயுதக் கும்பலை பயங்கரவாத அமைப்பாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அவர்கள் பொதுச் சொத்துக்களை சேதப்படுத்துதல், அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்துவதால் அரசாங்கத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர்.

இதன் காரணமாக குவாயாஸ், லாஸ் ரியோஸ், மனாபி உள்ளிட்ட 7 மாகாணங்களில் உள்நாட்டு கலவரம் வெடித்துள்ளது. எனவே, அந்த மாகாணங்களுக்கு இராணுவ அவசர நிலை பிறப்பித்து ஜனாதிபதி டேனியல் நோபோவா உத்தரவிட்டுள்ளார். மேலும், 20 மாகாணங்களில் இரவு நேர ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதனால், ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட முக்கிய பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். (எ)

# காஸாவில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல்

## 21 பேர் உயிரிழப்பு

காஸாமுனை, ஜன.06

காஸாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 21 பேர் உயிரிழந்தனர்.

காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர்.

இந்த நிலையில், ஓராண்டை கடந்தும் இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போர் நீடித்து வருகிறது. இந்த போரில் காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் அமைப்பினர் உட்பட 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

காஸாவின் கான் யூனிஸ், காஸா சிற்றி, டிர் அல் பலாக் உட்பட பல்வேறு பகுதிகளில் இஸ்ரேல் நடத்திய மற்றுமொரு தாக்குதலில் 21 பேர் உயிரிழந்தனர்.

மேலும், பலர் படுகாயமடைந்தனர். (எ)

# இரு படகுகள் கவிழ்ந்து 28 பேர் உயிரிழந்தனர்!

துனிஷ், ஜன.06

துனிசியாவில் ,ரண்டு படகுகள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 28 பேர் பலியாகினர்.

ஆபிரிக்க நாடுகளில் நிலவும் உள்நாட்டுப் போர் மற்றும் பொருளாதார நெருக்கடியால் ஏராளமானோர் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர். அவ்வாறு செல்லும் போது அவர்கள் பெரும்பாலும் கடல் மார்க்கமாக படகுகளில் செல்ல முற்படுகின்றனர். இதில் பல பயணங்கள் ஆபத்தில் முடிந்து விடுகின்றன. இருப்பினும் நாளுக்கு நாள் இவ்வாறு செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் துனிசியா, ஐரோப்பாவை அடையும் நோக்கில் 2 படகுகள் கடலில் பயணம் செய்தன. இதில் மொத்தம் 110 பேர் பயணம் செய்தனர். அப்போது எதிர்பாராதவிதமாக 2 படகுகளும் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 28 பேர் உயிரிழந்தனர். 83 பேர் மத்திய துனிசியாவில் உள்ள கெர்கென்னா தீவுகளில் மீட்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் வட ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று அந்த நாட்டின் தேசிய பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது. (எ)

# மலேசியாவுக்குள் நுழைய முயன்ற மியன்மார் அகதிகள் 200 பேர் கைது

கோலாலம்பூர், ஜன.06

மலேசியாவுக்குள் நுழைய முயன்ற மியன்மார் நாட்டைச் சேர்ந்த 200 அகதிகள் கைது செய்யப்பட்டனர்.

மலேசியாவுக்குள் அண்டை நாடுகளான மியன்மார், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து ஏராளமானோர் சட்டவிரோதமாக நுழைகின்றனர். சமீப காலமாக அகதிகள் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்த எல்லை பகுதியில் மலேசிய அரசாங்கம் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளது.



இந்த நிலையில் அங்குள்ள கெடா மாகாண கடற்பகுதியில் அகதிகள் ஊடுருவ முயற்சிப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதன்பேரில் கடலோர பொலிஸார் அங்கு ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது, அகதிகளை ஏற்றிக் கொண்டு 2 படகுகள் சென்றது கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து படகில் இருந்த 200 அகதிகளையும் பொலிஸார் கைது செய்தனர். இவர்கள் அனைவரும் மியன்மார் நாட்டை சேர்ந்தவர் கள் என்று முதல் கட்ட தகவல் வெளியாகியுள்ளது.(எ)

*மலைக்கு அடியில் 130 அடி ஆழத்தில் செயல்பட்ட*

# சிரியாவின் இரகசிய ஏவுகணை ஆலையை தகர்த்தது இஸ்ரேல்!

டமாஸ்கஸ், ஜன.06

சிரியாவில் மலைக்கு அடியில் சுமார் 130 அடி ஆழத்தில் செயல்பட்ட ஏவுகணை ஆலையை இஸ்ரேல் படையினர் துல்லிய தாக்குதல் மூலம் தகர்த்தனர்.

மேற்கு சிரியாவின் மஸ்பாயா பகுதி மலையில் ஈரான் அமைத்திருந்த ஏவுகணை ஆலையை தகர்க்க சுமார் 2 மாதங்கள் இஸ்ரேல் இராணுவ கமாண்டோக்கள் சிறப்பு பயிற்சியில் ஈடுபட்டனர். சிரியா இராணுவத்தின் கவனத்தை திசை திருப்ப கடந்த ஆண்டு செப்ரெம்பர் 8ஆம் திகதி சிரியாவை ஒட்டிய எல்லைப் பகுதிகளில் இஸ்ரேல் இராணுவம் மிகப் பெரிய மோதலில் ஈடுபட்டது. இதன் காரணமாக சிரியா இராணுவத்தின் ஒட்டுமொத்த கவனமும் எல்லைப் பகுதிக்குத் திரும்பியது.

இதைப் பயன்படுத்தி இஸ்ரேல் கமாண்டோக்கள் மத்திய தரைக்கடல் வழியாக ஏவுகணை ஆலைக்குள் எளிதாக நுழைந்து துல்லிய தாக்குதல் நடத்தினர். அங்கு பாதுகாப்பு பணி மற்றும் ஏவுகணை உற்பத்தி பணியில் ஈடுபட்டிருந்த சுமார் 30இற்கும் மேற்பட்டோரை சுட்டுக் கொன்றனர். இஸ்ரேல் கமாண்டோக்களுக்கு சிறிய பாதிப்பு கூட ஏற்படவில்லை.

சிரியாவில் ஆட்சி மாற்றத்துக்குப் பிறகும் அந்த நாட்டில் உள்ள ஆயுத உற்பத்தி ஆலைகள், ஆயுத கிடங்குகளை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இதன்படி, சிரியாவின் அலெப்போ உள்ளிட்ட நகரங்கள் மீது இஸ் ரேல் போர் விமானங்கள் நேற்று குண்டுகளை வீசின.

இதில் 5 ஆயுத கிடங்குகள் முழுமையாக அழிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தேவாலயத்தை குறிவைத்து துருக்கியில் துப்பாக்கிச்சூடு

அங்காரா, ஜன.06

துருக்கியில் தேவாலயத்தை குறிவைத்து துப்பாக்கிச் சூடு நடத்திய மூவர் கைது செய்யப்பட்டனர்.

இஸ்தான்புல் நகரில் ஒரு கிறிஸ்தவ தேவாலயம் அமைந் துள்ளது. அந்த வழியாக சென்ற காரில் இருந்த நபர்கள் தேவாலயத்தை குறிவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் அங்கிருந்த சங்க கட்டடத்தின் கண் ணாடிகள் உடைந்து நொறுங் கின. இதனால் அங்கிருந்தவர்கள் அலறியடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர். இந்த சம்பவத் தால் அங்கு சிறிதுநேரம் பதற்றம் நிலவியது.எனினும், அதிர்ஷ்டவசமாக உயிர்ச்சேதம் எதுவும் ஏற்பட வில்லை. இது குறித்து வழக்கு பதிவு செய்த போலிஸார் தாக்குதல் தொடர்பில் 3 பேரை கைது செய்து விசாரித்து வருகின்றனர். (எ)



# சீனாவில் புதிய வைரஸ் தொற்று

பீஜிங், ஜன.06

கோவிட் பெருந்தொற்றை தொடர்ந்து தற்போது சீனாவில் மனித மெட்டாப்நியூமோவைரஸ் வேகமாக பரவி வருகிறது. இந்த வைரஸ் பரவலால் மருத்துவமனைகள் நிரம்பி காணப்படுகின்றன. எச். எம். பி. வி, இன்ப்ளூாயன்சா ஏ, மைக்கோபிளாஸ்மா நிமோனியா மற்றும் கோவிட்-19 போன்ற பல வைரஸ்கள் ஒரே நேரத்தில் பரவி வருவதாக அந்த நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவிக் கின்றன.

இந்த நிலையில் குளிர்காலம் மற்றும் இலையுதிர் காலத்தில் இந்த சுவாச நோய்த்தொற்று தொடர்ந்து அதிகரிக்கும் என்று சுகாதாரத்துறையினர் கணித்துள்ளனர். சீனாவில், எச். எம். பி. வி. 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மற்றும் வடக்கு மாகாணங்களில் அதிக பாதிப்புகளையும் ஏற்படுத்தி வருகிறது. (எ)

# பனிப்புயலால் அடுத்தடுத்து மோதிய 100 வாகனங்கள்!

அஸ்தானா, ஜன.06

கஜகஸ்தான் நாட்டில் வாகன போக்குவரத்து அதிகம் உள்ள வீதிகளில் அஸ்தானா - சூசின்ஸ்க் நெடுஞ்சாலையும் ஒன்று. எப்போதும் பரபரப்பாக காணப்படும் இந்த வீதியில் நேற்று முன்தினம் மதியம் சென்றுகொண்டிருந்த வாகனங்கள் திடீரென ஒன்றுடன் ஒன்று மோதி விபத் துக்குள்ளாகின. அக்மேலா பிராந்தியத்தில் உள்ள கோகம், கராடல் ஆகிய கிராமங் களுக்கு மத்தியில் இந்த விபத்து நிகழ்ந்தது. கிட்டத்தட்ட 100 வாக னங்கள் விபத் துக்குள்ளாகி, வீதியில் குறுக் கும் நெடுக்குமாக கிடந்ததால் போக்குவரத்து ஸ்தம்பித்தது.



மோசமான வானிலை மற்றும் திடீரென ஏற்பட்ட பனிப்புயல் காரணமாக நிலை குலைந்த வாகன சாரதிகள், வாகனங்களை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# பார்டர் - கவாஸ்கர் கிண்ணத்தை கைப்பற்றியது அவுஸ்திரேலியா

## கடைசி போட்டியிலும் இந்தியா படுதோல்வி




சிட்னி, ஜன. 06

கடைசி டெஸ்ட் போட்டியில் இந்தியாவை 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி, பார்டர் - கவாஸ்கர் கிண்ண தொடரை அவுஸ்திரேலியா 3 - 1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் முதல் போட்டியில் இந்தியா வெற்றி பெற்ற நிலையில், 2ஆவது டெஸ்டில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது. 3ஆவது போட்டி மழை காரணமாக சமனிலையானது. பின்னர் 4ஆவது போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரில் 2 - 1 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதனையடுத்து இரு அணிகள் இடையிலான 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சிட்னியில் நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, முதல் இன்னிங்ஸில் 72. 2 ஓவர்களில் 185 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக ரிஷப் பண்ட் 40 ஓட்டங்கள் அடித்தார். அவுஸ்திரேலியா தரப்பில் ஸ்காட் போலன்ட் 4 விக்கெட்களும், மிட்செல் ஸ்டார்க் 3 விக்கெட்களும், கம்மின்ஸ் 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

பின்னர் முதல் இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலிய அணி 181 ஓட்டங்களுக்கு சுருண்டது. அதிகபட்சமாக வெப்ஸ்டர் 57 ஓட்டங்கள் அடித்தார். இந்திய அணி தரப்பில் முகமது சிராஜ், பிரசித் கிருஷ்ணா தலா 3 விக்கெட்களும், ஜஸ்பிரித் பும்ரா, நிதிஷ் குமார் ரெட்டி தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 4 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய இந்திய அணி 157 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக ரிஷப் பண்ட் 61 ஓட்டங்கள் அடித்தார். அவுஸ்திரேலியா தரப்பில் ஸ்காட் போலன்ட் 6 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினார். இதன் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு 162 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

அவுஸ்திரேலிய அணி தொடக்கத்தில் விக்கெட்களை இழந்து தடுமாறியது. இருப்பினும், கவாஜா (41 ஓட்டங்கள்), ட்ராவிஸ் ஹெட் (34 ஓட்டங்கள்) வெப்ஸ்டர் (39 ஓட்டங்கள்) அடித்து அணியை வெற்றி பெற செய்தனர். அவுஸ்திரேலியா 27 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 162 ஓட்டங்கள் அடித்தது. இதன் மூலம் 3ஆவது நாளிலேயே முடிவுக்கு வந்த இந்த போட்டியில் இந்தியா 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது. இந்தியா தரப்பில் பிரசித் கிருஷ்ணா 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட பார்டர் - கவாஸ்கர் கிண்ணத்தை 3 - 1 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா கைப்பற்றி அசத்தியுள்ளது. 10 வருடங்களுக்குப் பின்னர் அவுஸ்திரேலியா பார்டர் - கவாஸ்கர் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது. (எ)

# 9 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்து அபார வெற்றி



வெலிங்டன், ஜன.06

இலங்கை அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி அபார வெற்றி பெற்றது.

இலங்கை கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடி வருகிறது. முதலாவது ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, நியூசிலாந்தின் அபார பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 178 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. அதிகபட்சமாக விஷ்வ பெர்னாண்டோ 56 ஓட்டங்கள் அடித்தார். நியூசிலாந்து தரப்பில் மேட் ஹென்ரி 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 179 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து அணி வெறும் 26. 2 ஓவர்களில் ஒரு விக்கெட் மட்டும் இழந்து 180 ஓட்டங்கள் அடித்து எளிதில் வெற்றி பெற்றது. வில்யங் 90 ஓட்டங்களுடனும், சப்மேன் 29 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். மேட் ஹென்ரி ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (எ)

### ரஹ்மத் ஷா சதம்

# சரிவிலிருந்து மீண்டது ஆப்கானிஸ்தான் அணி

புலவாயோ, ஜன.06

ரஹ்மத் ஷாவின் சதத்தின் உதவியுடன் ஆப்கானிஸ்தான் அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 291 ஓட்டங்கள் எடுத்துள்ளது.


ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி சிம்பாவேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் போட்டி சமனில் முடிவடைந்த நிலையில், 2ஆவது டெஸ்ட் புலவாயோவில் கடந்த 2ஆம் திகதி தொடங்கியது.

இதன் முதல் இன்னிங்ஸில் முறையே ஆப்கானிஸ்தான்157 ஓட்டங்களும், சிம்பாவே 243 ஓட்டங்களும் அடித்தன. பின்னர் 86 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய ஆப்கானிஸ்தான் ஆரம்ப கட்டத்தில் விக்கெட்களை பறிகொடுத்து திண்டாடியது.

இந்த இக்கட்டான சூழலில் ரஹ்மத் ஷா சிறப்பாக விளையாடி சதமடித்து அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தார். நிலைத்து நின்று ஆடி 3ஆவது சதத்தை எட்டிய ரஹ்மத் ஷா 139 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

3ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் ஆப்கானிஸ்தான் அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 291 ஓட்டங்கள் எடுத்துள்ளது. இஸ்மாத் ஆலம் 64 ஓட்டங்களுடனும், ரஷித் கான் 12 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். ஆப்கானிஸ்தான் 205 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ள நிலையில் நேற்று 4 ஆவது நாள் ஆட்டம் நடைபெற்றது.(எ)

# இறுதிப்போட்டியில் அரினா சபலெங்கா



பிரிஸ்பேன், ஜன.06

பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் தொடரில் சபலெங்கா இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் பெலாரஸின் அரினா சபலெங்கா, ரஷ்யாவின் மிர்ரா ஆண்ட்ரீவாவுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய சபலெங்கா 6 - 3, 6 - 2 என்ற நேர் செட் கணக்கில் மிர்ரா ஆண்ட்ரீவாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். (எ)

# தென்னாபிரிக்க அணி 615 ஓட்டங்கள் குவிப்பு

## பாகிஸ்தான் அணி தடுமாற்றம்

கேப்டவுன், ஜன.06

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்கா 615 ஓட்டங்கள் குவித்துள்ளது.



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதன்படி இரண்டாவது போட்டியின் முதல் இன்னிங்ஸை தொடங்கிய தென்னாபிரிக்க அணி 141. 3 ஓவர்க ளில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 615 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணி தரப்பில் ரிக் கெல்டன் 259, பவுமா 106, கைல் வெர்ரையன் 100 ஓட் டங்கள் எடுத்தனர். பாகிஸ்தான் தரப்பில் சல்மான் ஆகா, முகமது அப்பாஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்கள் வீழ்த் தினர்.இதையடுத்து தனது முதல் இன்னிங்ஸில் விளையாடி வரும் பாகிஸ்தான் 3 விக்கெட்கள் இழந்து 64 ஓட்டங்கள் எடுத்துள்ளது. (எ)

# இந்தியா வெளியேறியது

டுபாய், ஜன.06

இந்தியாவுக்கு எதிரான கடைசி போட்டியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா கூடுதல் புள்ளிகள் பெற்ற நிலையில் 2ஆவது அணியாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. தோல்வியடைந்த இந்தியா சில புள்ளிகளை இழந்த நிலையில் 3ஆவது இடத்தில் தொடருகிறது. இந்திய அணியின் இறுதிப்போட்டி கனவு நேற்றுடன் கலைந்தது. மற்ற அணிகள் மாற்றமின்றி தொடருகின்றன.

டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியல் வருமாறு,

1. தென்னாபிரிக்கா - 66. 67 சதவீதம், 2. அவுஸ்திரேலியா - 63.73 சதவீதம்,3. இந்தியா - 50. 00 சதவீதம்,4. நியூசிலாந்து - 48. 21 சதவீதம்,5. இலங்கை - 45. 45 சதவீதம்,6. இங்கிலாந்து - 43. 8 சதவீதம்,7. பங்களாதேஷ் - 31. 25 சதவீதம்,8. பாகிஸ்தான் - 30. 30 சதவீதம்,9. மேற்கு இந்திய தீவுகள் - 24. 24 சதவீதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைந்து...

தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவு மற்றும் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரை யாடப்பட்டது.

கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், கோ.கருணாகரம், எம்.கே.சிவாஜிலிங்கம், ந.சிறிகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ப.வேந்தன், பவான் உள்ளிட்ட முக்கிஸ்தர்கள் கலந்து கொண்டனர். (அ)

## காரின்...

வீரபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட 21 வயதுடைய ஜேக்கப் நெவில் டிலக்ஷன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் உயிரிழந்த காரை பரிசோதித்த பொலிஸாரும் இதே முடிவிலேயே இருப்பதாகவும், உயிரிழந்த இளைஞனின் மரணம் தொடர்பில் பூரண மருத்துவ பரிசோதனையை முன்னெடுக்குமாறு, பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் . (அ)

## மாகாணத்...

550க்கும் மேற்பட்ட பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இலங்கை தொடர்பிலான தீர்மானத்தை பாராளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் முன்மொழிய தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர் எம்.சின்னத்துரை வழிமொழிந்தார்.

“இலங்கை தமிழர்கள், இஸ்லாமியர்கள், மலையகத் தமிழர்கள் சமத்துவத்துடன் வாழவும் - மாகாணங்களுக்கான அதிகாரப் பரவலாக்கலை உறுதி செய்திடவும் கோரும் தீர்மானம்” என்ற தலைப்பிலான அந்த தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பதாவது -

இலங்கையில் தமிழ் மக்கள் சமத்துவமின்மைக்கும் நீண்டகாலமாக இன வெறித் தாக்குதலுக்கும் ஆளாகிவந்த நிலையில், அது உள்நாட்டு யுத்தத்துக்கும் அமைதியின்மைக்கும் வழிவகுத்தது. அதனால் அனைத்துப் பகுதி மக்களும் பாதிக்கப்பட்டனர்.

தற்போது இலங்கைத் தமிழர்கள் உட்பட அனைத்து சிறுபான்மைச் சமூகங்களினதும் ஆதரவுபெற்ற தேசிய மக்கள் சக்தி அமோக பெரும்பான்மையுடன் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கிறது. இந்த சுமுகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி சமத்துவத்தையும் மாகாணங்களுக்கான அதிகாரப் பரவலாக்கலையும் உறுதிசெய்ய வேண்டும் என்று இந்த மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

நீண்டகாலமாக நடத்தப்படாமல் இருந்துவரும் மாகாணசபை தேர்தல்களை மிக விரைவாக நடத்தி மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்களை வழங்குவதன் மூலம் தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்றும் மகாநாடு கேட்டுக்கொள்கிறது. இலங்கை தமிழர்கள், இஸ்லாமியர்கள், மலையகத் தமிழர்களின் நம்பிக்கையைப் பெறும்வகையில் உரிய பேச்சுவார்த்தைகளை நடத்தி தீர்வுகளைக் காணவேண்டும்.

மாகாணங்களுக்கான அதிகாரப் பரவலாக்கத்தின்போது எந்தவிதமான கட்டுப்பாடுகளையும் விதிக்காமல் கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி, நிலம், காவல்துறை போன்ற அம்சங்களில் மாகாண அரசாங்கங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று இந்த மகாநாடு இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது. (அ)

## அரசாங்கத்தின்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சிப் பொறுப்பை ஏற்று நூறு நாட்கள் கடந்துவிட்டன. எனினும் தேர்தல் காலத்தில் உறுதியளித்த திட்டங்கள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.

பெறுமதி சேர் வரியை குறைப்பதாக உறுதியளித்தார்கள்.

மின்சக்தி, பெற்றோலியம், எரிவாயு ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியை குறைத்து அதன் நன்மை மக்களை சென்றடையும் வகையில் திட்டங்கள் அமுல்படுத்தப்படும் என உறுதியளித்தார்கள்.

அதாவது, ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் அவ்வாறான செயற்பாட்டுக்கு ஆரம்பம் கூட இல்லையென்பதே கவலைக்குரியது.

நாட்டில் அன்றாட அரச செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றனவே தவிர புதிய திட்டங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டமே தற்போது நடைமுறையில் உள்ளது-என்றார். (அ)

## ரணில்...

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகிய வேட்பாளர்கள் இருவரும் தோல்வியடைந்த நிலையில் மீண்டும் தீர்மானமிக்க ஒரு அரசியல் வெற்றியை பெற வேண்டுமானால் இந்த இரண்டு கட்சிகளும் இணைய வேண்டும் என அந்தந்த கட்சிகளிடையே உள்ளக கலந்துரையாடல்கள் எழுந்துள்ளன.

இரண்டு அரசியல் கட்சிளையும் இணைப்பதற்கான அடிப்படைக் கொள்கைகள் மற்றும் கட்சிச் சின்னங்கள் போன்ற காரணிகள் தொடர்பில் பின்னர் கலந்துரையாடவேண்டும் எனவும் இவ்விடயங்களை இரண்டு தரப்பினரிடமும் தொடர்புகொள்ள இருக்கும் ஒரே நடுநிலை அரசியல்வாதி கரு ஜயசூரிய எனவும் அங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதன்படி, வெகு விரைவில் கரு ஜயசூரியவுடன் இணைந்து குறித்த காரணிகள் தொடர்பில் முறையான கலந்துரையாடல்களை மேற்கொண்டு இணைந்த கூட்டணி ஒன்று உருவாக்கப்படும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

## 2024...

துப்பாக்கிச் சூட்டுட் சம்பவங்களுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த ஆண்டு பதிவான 103 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 56 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுடன் தொடர்புடையவை எனவும் இதில் 45 பேர் உயிரிழந்துள்ளமை தங்கள் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

16 பேர் கொல்லப்பட்ட மற்ற 47 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் வெவ்வேறு காரணங்களால் குறிப்பாக தனிப்பட்ட தகராறுகளால் நிகழ்ந்தவை என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள் ளனர்.

2024 ஆம் ஆண்டில் பதிவான கடைசி துப்பாக்கிச் சூடு சம்பவம் டிசெம்பர் 28 ஆம் திகதி மாலையில் பதிவாகியிருந்தது. சீதுவ பகுதியில் உள்ள ஒரு வீட்டில் காரில் வந்த அடை யாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் ஒருவர் கொல்லப் பட்டதுடன் இருவர் காயமடைந்தனர். தந்தை மற்றும் அவரது இரண்டு மகன் களை இலக்கு வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸார் விவரித்துள்ளனர்.

## முக்கியத்துவம்...

நிதியளித்துள்ளது.

இந்த திட்டங்கள் இலங்கை தேசத்தை நவீனமயமாக்கியது மட்டுமல்லாமல், அதன் பொருளாதார வளர்ச்சிக்கான அடித்தளத்தையும் அமைத்துள்ளன.

இதன்படி, ஜனாதிபதி அநுரவின் சீன விஜயம் இந்த அடித்தளத்தின் அடிப்படையில் ஒத்துழைப்புக்கான புதிய வழிகளை ஆராய்வதன் மூலம் கட்டமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் முக்கிய விளைவாக புதிய வளர்ச்சித் திட்டங்கள் அடையாளம் காணப்படும் எதிர்பார்க்கப்படுகிறது.

சீன நிறுவனங்கள் இலங்கையில், குறிப்பாக ஹம்பாந்தோட்டை போன்ற சுதந்திர வர்த்தக மண்டலங்களில் தங்கள் தடத்தை விரிவுபடுத்த ஆர்வமாக உள்ளன.

இலங்கையின் தொடர்ச்சியான பொருளாதார மீட்சிக்கு இந்த முதலீடுகள் மிக முக்கியமானவையாகும்.

மேலும், சீனாவின் லட்சியமான பெல்ட் அண்ட் ரோட் முன்முயற்சியுடனும் ஒத்துப்போகின்றன, இது உலகளாவிய வர்த்தக மற்றும் உள்கட்டமைப்பு வலையமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கிய அங்கமான சுற்றுலா, அரசியல் ஸ்திரமின்மை மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக சமீபத்திய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டுள்ளது.

இந்நிலையில், சுற்றுலா சந்தையுடன் கூடிய மறுமலர்ச்சிக்கான ஒரு மதிப்புமிக்க வாய்ப்பை சீனா வழங்குகிறது. சீனப் பயணிகளுக்கு இலங்கையை ஒரு முக்கிய சுற்றுலா தலமாக ஊக்குவிப்பதற்கான திட்டங்கள் நிகழ்ச்சி நிரலில் அதிகமாக இருக்கும் என நம்பப்படுகின்றது.

சுற்றுலாப் பயணிகளின் எதிர்பார்க்கப்படும் வருகை தொழில்துறையை புத்துயிர் பெறச் செய்யலாம் எனவும் உள்ளூர் வணிகங்கள் மற்றும் சமூகங்களுக்கு மிகவும் தேவையான வருவாயைக் கொண்டு வரும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

சீனா, இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற முக்கிய சக்திகளிடையே போட்டி தீவிரமடைந்து வருவதால், இலங்கை நடுநிலையான நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு, அனைவருடனும் சமநிலையான உறவுகளைப் பேண முயல்கிறது.

ஜனாதிபதி அநுராவின் சீனப் பயணம், அரசியல் சீரமைப்புகளை விட பொருளாதார முன்னுரிமைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அதே வேளையில், இந்த நடுநிலைமையை மீண்டும் உறுதிப்படுத்துகிறது என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

## ஜெனீவாவில்...

உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், மனித உரிமை பேரவையின் அமர்வில் சமர்ப்பிக்கப்படும் எந்த தீர்மானத்தின் 51/1 நகல்வடிவையும் இலங்கை தொடர்ந்து எதிர்க்கும்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்த ஆதாரங்களைச் சேகரிக்கும் வெளிப்புற பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கும் எந்த தீர்மானத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் இறுதி அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தின் நகல் வடிவை நிராகரிப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் கடந்த ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

எனினும் உள்நாட்டுப் பொறிமுறை மூலம் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை பிரச்னைகளுக்கு தீர்வைக் காண்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

ஆனால் ஜெனிவா தீர்மானத்தில் உள்ள பல விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

எவ்வாறாயினும் பொறுப்புக்கூறும் விடயத்தை பிரதிபலிக்கக்கூடிய நேர்மையான அறிக்கையை கூடிய விரைவில் அரசாங்கம் முன்வைக்க உள்ளது. இந்த அறிக்கையானது ஜெனிவாவுக்கு பதிலளிப்பதாக அல்லாது எமது அரசாங்கத்தின் நிலைப்பாட்டை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவதாகவே இருக்கும்.

குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்னைகள் குறித்து அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பிரதிபலிக்கும் வகையிலேயே எமது சிறப்பறிக்கை அமையும். இதற்காக இலங்கையின் விசேட இராஜதந்திரக் குழு செயற்படும் என்று கூறியுள்ளது. (அ)

## சிறைகளில்...

ஈடுபட்டவர்களே இப்போது சிறைச்சாலைகளில் பாரியளவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதன் காரணமாகவே சிறைச்சாலைகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே சிறைக்கைதிகளுக்கு அடிக்கடி வழங்கப்படும் பொதுமன்னிப்புகளின் போது சட்டவிரோத மதுபானம் தயாரித்த குற்றத்திற்காக சிறைத் தண்டனை விதிக்கப்படும் நபர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகள் ஏனைய கைதிகளுக்கு கிடைப்பதில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## தமிழினப்...

பியெர் பொய்லிவ்ர் தெரிவித்துள் ளார்.

தமிழர் மரபுரிமை மாதத்தை முன்னிறுத்தி அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் அவர் இதுபற்றி மேலும் கூறியிருப்பதாவது:-

நாம் ஜனவரி மாதம் முழுவதும் கடும் உழைப்பாளிகளைக் கொண்டாடுகின்றோம். கனடாவில் வாழும் தமிழர்கள் அவர்களது வரலாற்றுப் பாரம்பரியத்துடன் நெருங்கிய பிணைப்பைக் கொண்டிருக்கும் அதேவேளை, பல தசாப்தகாலமாக எமது சமூகத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளனர்.

தமிழர்களின் இப்பாரம்பரிய வரலாறு பல ஆயிரம் வருடங்கள் பழமை வாய்ந்ததாகும். அவர்களது பாரம்பரிய கலாசாரமானது மொழி, இசை, கலை மற்றும் உணவுப் பழக்கவழக்கங்கள் என்பவற்றின் ஊடாக வெளிப்படுகின்றது.

இருப்பினும் நாம் கொண்டாடும் இந்த தமிழ் மரபுரிமை மாதம் துரதிஷ்டவசமாக அதற்குரிய முழுமையான கௌரவத்தை இன்னமும் பெற்றுக் கொள்ளவில்லை. அதேவேளை மிக மோசமான தமிழினப்படுகொலையினால் பாதிக்கப்பட்ட பலர் இன்னமும் நீதிக்காகக் காத்திருக்கிறார்கள்.

எனவே கனேடிய கன்சர்வேட்டிவ் கட்சியினரான நாம் இந்த தமிழர் மரபுரிமை மாதத்திலும், இவ்வாண்டு முழுவதும் மேற்குறிப்பிட்டவாறான மிகமோசமான குற்றங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை உறுதியாக வலியுறுத்துவோம்.

அதேவேளை கனடாவில் வாழும் தமிழ்ச்சமூகத்தினரைக் கொண்டாடுவதில் நாம் பெருமையடைகின்றோம்- என்று கூறியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சிறுபான்மையா சகோதர இனமா?

## மனித உரிமை ஆணைக்குழுவிடம் விளக்கம் கோரிய சர்வமத அமைப்பு

கொழும்பு, ஜன. 06

'சிறுபான்மை இனம்' என்ற சொல்லுக்குப் பதிலாக 'சகோதர இனம்' அல்லது வேறு ஏதும் ஒரு பொருத்தமான சொல்லைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு மனித உரிமைகள் ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவாவிடம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வேண்டுகோள் விடுத்துள்ளது.

கண்டி மாவட்ட சர்வமத அமைப்பின் செயலாளர் காமினி ஜயவீர எழுத்து மூலம் விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் தெரிவித்திருப்பதாவது-

சிறுபான்மை என்னும்போது இயல்பாகவே தாம் சிறியவர்களாக தாழ்த்தப்படும் மனோ நிலை ஏற்படுவதாகவும் அதேநேரம் பெரும்பான்மை எனும்போது அது குறிப்பிட்ட ஒரு சாராரை உயர்த்தி மதிப்பிடும் ஒரு மனோபாவத்தையும் ஏற்படுத்துவதாகும்.

எனவே, சிறுபான்மை என்ற பதம் பொதுவான இடங்களில் பயன்படுத்தப்படுவதற்குப் பதில் மாற்றீடான ஒரு சொல் பயன் படுத்தப்படுவது இன ஒற்றுமைக்கு நல்லது.

அந்த வகையில் சகோதர இனம் என்ற சொல்லையே எமது அமைப்பு பயன்படுத்துகிறது. இதனை பரவலாக்குவது நல்லதென எமது அமைப்பு கருதுகிறது.

அதே நேரம் இலங்கையில் தமிழ், முஸ்லிம் இனங்களை 'சிறுபான்மை' என்ற சொல் கொண்டு அழைப்பதால் அவர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக கணிக்கப்படுகின்றனர். ஆனால் அவர்களும் சம உரிமையுடன் வாழ்வதற்கு உரித்துடையவர்கள் என்பதால் அதற்குப் பொருத்தமான ஒரு பதத்தை அறிமுகம் செய்யும்படியும் சகோதர இனம் என்பது பொருத்தம் போலிருப்பின், அது தொடர்பாக சமூகத்தில் ஒரு கருத்துப் பறிமாற்றத்தை ஏற்படுத்தும் படியும் கோருகிறோம் - என்றுள்ளது. (அ)

# இலங்கை வரும் ஆய்வுக் கப்பல்களுக்கு நிலையான மூலோபாய விதிமுறைகள்!

## தேசிய மக்கள் சக்தி அரசு தீர்மானம்

கொழும்பு, ஜன. 06

**இலங்கை வருவதற்கு அனுமதி கோரும் உலக நாடுகளின் ஆய்வுக் கப்பல்களுக்கு நிலையான மூலோபாய ஒத்துழைப்பு விதிமுறையின் கீழ் அனுமதியளிப்பது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. இதற்கு அமைவாக விசேட விதிமுறை ஒன்றை உருவாக்குவதற்கு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.**

இலங்கை கடற்பரப்புக்குள் வரும் உலக நாடுகளின் ஆய்வுக் கப்பல்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிக தடை கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது.

இந்த தடையை முந்தைய அரசாங்கம் விதித்திருந்தது. எவ்வாறாயினும் உலக நாடுகளின் ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக்கு வருவதால் ஏற்படக்கூடிய இராஜதந்திர நெருக்கடிகளை தவிர்க்கும் வகையில் பொதுவானதொரு மூலோபாய ஒத்துழைப்பு விதிமுறையை உருவாக்குவதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேராத் தலைமையிலான சிறப்புக் குழுவை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நியமித்துள்ளார்.

இந்த குழுவின் பணி உலக நாடுகளின் ஆய்வுக்கப்பல்களை இலங்கைக்குள் அனுமதிப்பதாயின் மூலோபாய ஒத்துழைப்பு விதிமுறைகளை கவனத்தில் கொண்டு நிலையான ஒரு செயல்முறையை அனைத்து நாடுகளுக்கும் பொதுவானதாக உருவாக்குவதாகும்.

எனினும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஆய்வுக்கப்பல்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிக தடை தற்போது காலாவதியாகியுள்ளது.

எனவே புதிய விதிமுறை அறிமுகப்படுத்தும் வரை எந்தவொரு உலக நாடுகளில் ஆய்வுக்கப்பல்களும் இலங்கை விஜயத்துக்கு அனுமதி கோராது என்று நம்புவதாக அரசாங்கத்தின் கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டது. (அ)

# போதைப்பொருள் பிரச்னைக்கு தீர்வு காண பாரிய திட்டங்கள்!

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல

கொழும்பு, ஜன. 06

நாட்டில் போதைப்பொருள் பிரச்னைக்கு தீர்வு காண பாரிய செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் பொரளை தொகுதி ஒருங்கிணைப்பு அலுவலகத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் அரசியலமைப்பை முறையாக பேணும் ஜனாதிபதி ஒருவர் இப்போது இருக்கிறார். யாரும் எதிர்பார்த்திராத பலம் நமக்கு இருக்கிறது.

நாட்டில் மறுமலர்ச்சி ஆரம்பித்துவிட்டதாகவே கூற முடியும். மக்கள் பிரச்னைளைத் தீர்க்கும் அரசாங்கமாக நாம் மாறியுள்ளோம். போதைப்பொருள் பிரச்னையை தீர்ப்பது தொடர்பில் அமைச்சில் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன.

அதற்கென 88 ஆயிரம் பொலிஸாரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர். போதைப்பொருளை நாட்டுக்குள் கொண்டுவருபவர்கள் குறித்து நாம் அவதானம் செலுத்தியுள்ளோம்.

அவர்களை கைதுசெய்வதற்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். போதைப்பொருள் எனும் அரக்கனை முற்றாக ஒழிக்க வேண்டும் என்பதே ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தின் நோக்கமாகும்.

நாட்டு மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையில் வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்படும் - என்றார். (அ)

# போலி நாணயத்தாளுடன் மூவர் கைது

கொழும்பு, ஜன 06

தமன, வனகமுவ பிரதேசத்தில் கையடக்க தொலைபேசி விற்பனை நிலையம் என்ற போர்வையில் வீடொன்றில் இயங்கி வந்த 5,000 ரூபாய் போலி நாணயத்தாள் தயாரிக்கும் தொழிற்சாலையை சுற்றிவளைத்து மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், போலி நாணயத்தாள்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மடிக்கணினி உள்ளிட்ட பல உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளதாக தமன பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களும் 29-20 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும், அவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் எனவும் தகவல் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த இடத்தில் ஏ4 அளவு தாள்கள் , மூன்று அச்சடிக்கப்பட்ட பிறகும் வெட்டி அகற்றப்படாத 10 போலியான 5000 ரூபாய் பெறுமதியான நோட்டுகளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (அ)

# மதவாச்சி பொருளாதார மத்திய நிலையம் மீளத் திறப்பது குறித்து அமைச்சர் ஆராய்வு

கொழும்பு, ஜன. 06

அநுராதபுரம், மதவாச்சி பொருளாதார மத்திய நிலையத்தை மீள திறப்பது குறித்து ஆராயப்படவுள்ளது.

வர்த்தகம், வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க நேற்று அங்கு விஜயம் மேற்கொண்டபோது இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

பொருளாதார மத்திய நிலையத்தின் தற்போதைய நிலை மற்றும் அதனை மீளக் கட்டியெழுப்புவதற்கான திட்டங்கள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த பொருளாதார மத்திய நிலையத்தை மீள திறக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் அமைச்சருக்கு இதன்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. (அ)

# ஐக்கிய தேசியக் கட்சியை வலுப்படுத்துவதே இலக்கு

## கூறுகிறார் தலதா அத்துக்கோரள

கொழும்பு, ஜன. 06

ஐக்கிய தேசியக் கட்சியை முன்பிருந்த நிலைக்கு மீண்டும் வலுப்படுத்துவதே தனது இலக்காகும் என கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளமை கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இனி வரும் காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியை கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்.

அத்துடன், எதிர்வரும் தேர்தல்களில் கட்சிக்கான வாக்குவங்கியை அதிகரித்து, முன்னைய நிலைக்கு எமது கட்சியை மீளக் கட்டியெழுப்புவதே எனது பிரதான இலக்காகும் என தலதா அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

# வவுனியா மாவட்டத்தில் 41 பேருக்கு எலிக்காய்ச்சல்

வவுனியா, ஜன. 06

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 2024 ஆம் ஆண்டு 41 பேர் எலிக்காய்சல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை சிறுபோகம் மற்றும் பெரும்போகம் போன்ற நெற்பயிர்ச்செய்கை காலங்களில் எலிக்காய்சல் தொற்று கடந்த காலங்களில் குறிப்பிட்ட அளவு பதிவாகியிருக்கிறது.

எனினும், 2024 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரை 41 பேர் எலிக்காச்சல் நோயால் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பாதிக்கப்பட்டனர். அவர்கள் குணமடைந்து தற்போது வீடுகளுக்கு சென்றுள்ளனர் எனவும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது. (அ-10 )

# ஈழத்து சிதம்பரம் நோக்கி ஆன்மீகப் பாதயாத்திரை!

யாழ்ப்பாணம், ஜன. 06

திருவெம்பாவை விரதத்தை முன்னிட்டு வருடாந்தம் இடம்பெறும் ஈழத்துச் சிதம்பரம் நோக்கிய ஆன்மீகப் பாதயாத்திரை 11 ஆவது வருடமாக நேற்றும் இடம் பெற்றது. இலங்கை சைவ மகாசபையின் ஏற்பாட்டில் மாதகல் சம்புநாத ஈச்சரர் முன்றலில் நேற்று காலை பாதயாத் திரை ஆரம்பமானது.

ஆன்மீகப் பாதயாத்திரை சாந்தை, பணிப்புலம், சுழிபுரம், மூளாய், பொன்னாலை வழியாக சென்று காரைநகரில் உள்ள பல்வேறு இந்து ஆலயங்களையும் தரிசித்தவாறு காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தைச் சென்றடைந்தது.

இதன்போது அடியவர்களால் சிவனுக்குரிய பஜனைகள் பாராயணம் செய்யப்பட்டன.

ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள் இடம் பெற்றதோடு, பாதயாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கு தன்னார்வலர்களால் தாக சாந்தியும் வழங்கப்பட்டது.

யாத்திரையில் அகில இலங்கை சைவமகாசபையினர், தமிழ் சைவ பேரவையினர், சிவமங்கையர், சிவ தொண்டர்கள், அடியவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.